பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 26 செவ்வாய்க்கிழமை (08-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:196

# இயல்பு வாழ்க்கை, மீள்குடியமர்வை வலியுறுத்தி வெள்ளியன்று பேரணி

## யாழ். பொது அமைப்புக்கள் ஏற்பாடு கிழக்குக் கொலைகளுக்கும் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

★ தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையில் உள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

★ கிழக்கில் இடம்பெறும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களின் கொலைகள் நிறுத்தப்பட வேண்டும் - ஆகிய மேற்படி மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் செய்துள்ளது.

மேற்படி கண்டனப் பேரணி தொடர்பாக பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுமாலை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி சந்திரிகாவின் நழுவல் போக்கினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளன. பெரும் இழப்புக்களையும், அழிவுகளையும் எதிர்கொண்டு இன்று சமாதான வழியில் ஒரு தீர்வு கிடைக்கும் என்று காத்திருக்கும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு மங்கிவருகிறது.

போர்நிறுத்தம் ஏற்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபத்தெட்டு மாதங்களாகியும் தமிழர் தாயகத்தில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, பேச்சுகள் இழுத்தடிக்கப்பட்டு மீண்டும் ஒரு போரை தமிழ் மக்கள் மீது திணிக்கும் முயற்சிகள் தொடங்குவதுபோல தெரிகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். அரசின் இந்தப் போக்கை யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடுமையாக எதிர்க்கின்றது.

புதிய அரசை ஜனாதிபதி சந்திரிகா அமைத்தபோது போர் நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூன்8

ஊடகவியலாளர் அமரர் நடேசனின் கொலையைக் கண்டித்தும் கொலையாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தக் கோரியும் நாளை கோட்டை ரயில் நிலையம் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியன இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளன.

பகல் 12.30 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## மல்வத்தை மகா நாயக்க தேரர் நேற்று கண்டியில் காலமானார்



கொழும்பு,ஜூன்8

மல்வத்தை மகா நாயக்கர் ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸி தேரர் நேற்றுக் கண்டியில் காலமானார்.

அண்மைக்காலமாக சுகவீனமுற்றிருந்த அவர், இலங்கையில் உள்ள பௌத்த பீடங்களின் மிகவும் முக்கிய பீடமான கண்டி மல்வத்தை பீடத்தின் பீடாதிபதியாக நீண்டகாலமாகக் கடமையாற்றி வந்தார்.

இவர் மகா நாயக்கர்களில் மிகவும் முதிர்ந்தவரும் அனுபவம் வாய்ந்தவரும் ஆவார். பௌத்த பீடங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இவரின் ஆலோசனைப்படியே செயற்பட்டு வந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றில் மூன்று நாள்களுக்கு நாட்டு நிலைமைகள் விவாதிக்கப்படும்

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு இறையாண்மையை மீறக்கூடாது

### இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு



புதுடில்லி,ஜூன்8

இலங்கையின் இறையாண்மைக்கு பங்கம் இல்லாத வகையில் அங்குள்ள தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்கப் பெற வேண்டும்.

- இப்படி இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் நேற்றுத் திங்கட்கிழமை உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நடைபெறும் அமைதிப் பேச்சுக்களுக்கு இந்தியா ஆதரவளிக்கும். இதன்மூலம் மொழி, மற்றும் சிறுபான்மையினருக்கு சுய கௌரவம், உரிமைகள் கிடைக்கப்பெற வேண்டும். அதேநேரத்தில், இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார். (எ-9)

## எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை அரசுத்தரப்பு ஏற்றுக்கொண்டது

கொழும்பு, ஜூன்8

**நாட்டின் பாதுகாப்பு மற்றும் இன்றைய அரசியல் நெருக்கடிகள் குறித்து நாடாளுமன்றத்தில் மூன்று நாள்களுக்கு விவாதம் நடத்தப்படும்.**

**இதுதொடர்பாக எதிரணி முன்வைத்த கோரிக்கையை அரசுத் தரப்பு ஏற்றுக்கொண்டது. எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் இந்த விவாதம் நடைபெறும்.**

நாட்டில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அரசியல் நெருக்கடிகள் தொடர்பான பொதுவிவாதம் நாடாளுமன்றத்தில் மூன்று தினங்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

இது தொடர்பான எதிர்க்கட்சிகளின் கோரிக்கை சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் நாட்டில் அமைதி சீர்குலைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக தொடர்ச்சியாகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர். பொலீஸார் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுத் தள்ளுகின்றனர். உடைமைகள் சூறையாடப்படுகின்றன - என்று எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. கிழக்கு மாகாணத்தில் அரசின் - இராணுவத்தின் - கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தொடர்ச்சியா

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சிறுமி கொலை; சந்தேக நபர் கைதானார்!

வவுனியா, தாளிக்குளம் பகுதியில் கடந்த புதனன்று வாய்பேச இயலாத சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தவர் எனக் கூறப்படும் இளைஞர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

அவரை விளக்கமறியலில் வைக்கும்படி வவுனியா நீதிவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டிருக்கின்றார்.

கிருபாகரன் ஜனிட்டா (வயது 15) என்ற சிறுமியே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

ஆடு மேய்ப்பதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற இச்சிறுமியை பற்றைக் காட்டுக்குள் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விட்டு அங்கிருந்து ஓட முயன்றதாகக் கூறப்படும் இளைஞரைப் பெண்மணி ஒருத்தி கண்டிருக்கிறார்.

அவர் கொடுத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்ட அச்சந்தேக நபர் நேற்று வவுனியா மேலதிக நீதிவான்

(16ஆம் பக்கம் பார்க்க)



*தமிழீழ மாணவர் எழுச்சி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் உரையாற்றுவதையும் வவுனியா கல்வியியற் கல்லூரி மாணவிகள் சுலோகங்களை தாங்கியவாறு பேரணியாகச் செல்வதையும் படங்களில் காணலாம்.*

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில்

# பஷீர் சேகுதாவூத், நிஜாமுதீன் இருவரும் எம்.பிக்களாகின்றனர்

கொழும்பு,ஜூன்8

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பிக்களாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த இருவர் இன்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொள்வர்.

இன்று காலை பத்து மணிக்கு சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நாடாளுமன்றம் கூடுகிறது. இதன்போது முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், முன்னாள் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத், முஸ்லிம் காங்கிரஸ் அரசியலமைப்புக் குழு உறுப்பினரும், முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.நிஜாமுதீன் ஆகியோர் எம்.பிக்களாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர் என அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் சிபார்சு செய்யப்பட்ட இவ்விருவரினதும் பெயர்களை ஐக்கிய தேசியக் கட்சிச் செயலாளர் நாயகம் நேற்று நண்பகல் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருந்தார். இதனையடுத்து அவர் இவ்விருவரினதும் பெயர்களை வர்த்தமானியில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சாபில் ஐ.தே.கட்சி தேசியப் பட்டியல் எம்.பிக்களாகப் பதவி வகித்த புஷ்பகுமார, இஸ்மாயில் குத்தூஸ் ஆகியோரின் இராஜினாமாவையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமனம் பெறுகின்றனர். (க)

# இன்று மீண்டும் நாடாளுமன்றத்தில் கந்தப்பொல விவகாரம் சூடுபிடிக்கும்!

இன்று நாடாளுமன்றம் கூடும்போது கந்தப்பொல அசம்பாவிதங்கள் தொடர்பான விவகாரம் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த 18ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியபோது சபை ஒத்திவைப்பு வேளையில் கந்தப்பொல அசம்பாவிதங்கள் தொடர்பான விவாதம் நடைபெற்றது.

எனினும், இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஜே.வி.பியினர் ஏற்படுத்திய அமைதி இன்மையால் இவ்விவகாரம் தொடர்பான விவாதம் முழுமையாக நடைபெறவில்லை. கூச்சல், குழப்பங்களுக்கு மத்தியில் சபை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இன்றைய அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது தொடர்பாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வேளையிலேயே மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் கடந்த அமர்வின்போது நிறைவுபெறாமல் தடைப்பட்ட கந்தபொல விவகாரம் தொடர்பான விவாதம் தொடர்ந்து நடைபெற அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

கட்சித் தலைவர் கூட்டத்தில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனால், கந்தப்பொல விவகாரம இன்று மீண்டும் சபையில் சூட்டைக் கிளப்பலாம். இந்த விவாதத்தின்போது புளத்சிங்களவில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## தொலைக்காட்சி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சிறுவர் பூங்காவிற்கு ஹற்றன் நஷனல் வங்கி தொலைக்காட்சி ஒன்றையும், டெக் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சிறுவர் பூங்காத் திறப்பு விழா நிகழ்வின்போது வங்கி முகாமையாளர், வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் இவற்றை வைபவ ரீதியாகக் கையளித்தார். (எ-15)

# பனை அபிவிருத்தி தொடர்பான ஆய்வில் யாழ்.பல்கலை ஈடுபடாதது துரதிர்ஷ்டமானதே!

## செய்தியாளர் சந்திப்பில் சபையின் புதிய தலைவர் சிவதாஸன்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்ப்பாணம் பனை வளம் நிறைந்த பூமி - எனினும் இங்குள்ள பல்கலைக்கழகம் பனை அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. இது துரதிர்ஷ்டவசமானதே.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராகப் பதவியேற்றுள்ள எஸ்.சிவதாஸன் இப்படிக் கூறினார்.

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராகப் பதவி ஏற்றுள்ள எஸ்.சிவதாஸன் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். இவர் நேற்று மாலை யாழ்.-கண்டி வீதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபை அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

செய்தியாளர் சந்திப்பை ஒட்டி அந்தப் பகுதியில் பொலீஸ் இராணுவத்தினர் கூடுதலாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனை அபிவிருத்திச் சபையானது 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதும் இதற்கென தனியான சட்டவாக்கம் ஒன்று ஏற்படுத்தப்படவில்லை. பனை அபிவிருத்திச் சபையானது தென்னை அபிவிருத்தி சபை சட்டவாக்கத்தின் கீழேயே செயற்பட்டு வருகிறது. இதனை மாற்றியமைத்து பனை அபிவிருத்திக்கென தனியான ஒரு சட்டவாக்கத்தை ஏற்படுத்துவதே எமது முதல் பணியாகும்.

அரசு பனை அபிவிருத்திச் சபையின் நடவடிக்கைக்கென வருடம் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையையே வழங்கி வருகின்றது. இதனைக் கொண்டு திட்டங்களைச் செயற்படுத்துவது மிகவும் கடினமாகவுள்ளது.

காலத்தின் தேவைகருதி பனம் தொழிலில் சில விஞ்ஞான தொழில் நுட்பங்களைப் புகுத்த வேண்டியுள்ளது. அதற்கேற்றவகையில் இவ்வளம் தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

சர்வதேச நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் தமது நாடுகளின் மூலவளங்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன. ஆனால், பனை வளம் நிறைந்து காணப்படும் யாழ்.குடாநாட்டிலுள்ள எமது பல்கலைக்கழகம் இது தொடர்பாக எடுத்துக் கூறத்தக்க வகையில் ஆய்வுகளை மேற்கொள்ளாதது மிகவும் வேதனை தருகிறது.

கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்ற யுத்தக் கொடூரங்களால் பெருமளவான பனை வளங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கென பனம் பண்ணைகள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன், அப்பண்ணைகளில் நான்கு அல்லது 5 வருடங்களில் பயன்தரக் கூடிய ஊடுபயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவும், அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இவ்வளத்தை நம்பியுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பனம் தொழில் செய்வதில் உள்ள தொழில் நுட்பப் பிரச்சினைகள், அதன் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் என்பனவற்றால் பலர் இத்தொழில் முயற்சியில் இருந்து விலகி வருகின்றனர். அதனைத்தடுப்பதற்கு ஏற்றவகையில் நவீன தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் பனை மரங்கள் அழிக்கப்படுவதாகப் புகார்கள் எழுப்பப்படுகின்றன. அது உண்மைதான். இருந்தாலும் அங்கு மட்டும் அவ்வாறு நடைபெறவில்லை. வேறு பகுதிகளிலும் பனை வளங்கள் அழிக்கப்படுகின்றன. இருந்தபோதும், உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நடைபெறும் இந்த நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் கதைத்து தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

பனை அபிவிருத்திச் சபையில் பணிபுரிந்த பல ஊழியர்கள் அரசியல் பழிவாங்கல்கள் மூலம் பணி நீக்கம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாகத் தங்களுடைய கருத்து என்ன என்று செய்தியாளர்கள் கேட்டபோது -

அதனை முற்றாக மறுத்த சிவதாஸன், இதுவரை அவ்வாறான எந்த நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. எதிர்காலத்திலும் இவ்வாறான பழிவாங்கல்கள் இடம்பெறமாட்டாது என உறுதியளித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் பனை அபிவிருத்திச் சபையின் பதில பொது முகாமையாளர் ஆர்.குகநேசன், பனை அபிவிருத்திச் சபை அபிவிருத்தி ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஏ.கே.நிக்கவல ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-5)

# பஸ்களில் திருடர்; பயணிகளே கவனம்!

தென்மராட்சி,ஜூன்8

குடாநாட்டில் பஸ்களில் பயணிகளிடம் பணம் திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

பஸ்களில் நிலவும் சனநெருக்கடியை வாய்ப்பாகப் பயன்படுத்தி பயணிகளோடு பயணிகளாக ஏறும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

நேற்று மீசாலையில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் பயணி ஒருவர் 30 ஆயிரம் ரூபாவைப் பறிகொடுத்துள்ளார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த எஸ். செல்லம்மா என்ற பெண்மணியினால் வங்கியில் வைப்பிலிடுவதற்கெனக் கொண்டு செல்லப்பட்ட பணமே இவ்வாறு திருட்டுப்போனதாகக் கூறப்பட்டது.

கடந்த 30 ஆம் திகதி சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற பஸ்ஸில் மற்றொரு பயணியிடமிருந்து 10 ஆயிரம் ரூபா அமுக்கப்பட்டிருக்கிறது.

எனவே பொதுமக்கள் பஸ்களில் பயணிக்கும் போது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4-117)

# மு.காவின் 4 எம்.பிக்களும் அரசுடன் இணைகிறார்கள்!

## கௌரவிப்பு விழாவில் பிரதி அமைச்சர் அன்வர் இஸ்மாயில்

அம்பாறை,ஜூன்8

"தேசிய அரசியலிலே முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் எதிர்க்கட்சியிலிருப்பதால் எவ்வித பலனும் கிடையாது. இதனைக் கருத்திற் கொண்டே முஸ்லிம் காங்கிரஸின் நான்கு எம்.பிக்களும் மிக விரைவில் அரசுடன் இணைவார்கள்".

கிழக்கு அபிவிருத்தி, உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் இவ்வாறு தெரிவித்தார்.

இறக்காமம் பஸ் நிலையத்தில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பிரதியமைச்சரைப் பாராட்டுமுகமாக கடந்த ஞாயிறு மாலை கவிஞர் நவாஸ் சௌவி தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதி அமைச்சர் மேலும் கூறியதாவது:-

நம் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அமையும் போது, முஸ்லிம்களின் நலனையும் கருத்திற் கொண்டு அவர்களின் அபிலாஷைகளும் உள்ளடக்கப்படும் வண்ணம், சகல ஏற்பாடுகளையும் ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார். இது பாராட்டத்தக்கது.

தொடர்ந்தும் எதிர்க்கட்சியிலிருந்து எதனையும் சாதிக்க முடியாது என்ற நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது.

மேலும் தேசிய அரசியலிலே பாரிய மாற்றம் ஏற்படுமென்று நாம் ரவூப் ஹக்கீமுக்குப் பலமுறை எடுத்துக் கூறினோம். அதுபற்றி அவர் சிறிதளவேனும் கருத்திற்கொள்ளவில்லை. ஆனால், இன்று முஸ்லிம் காங்கிரஸ தலைகுனியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஹக்கீம் நம்பியிருந்த ஹுசைன் பைலா கூட அரசுடன் இணைந்து விட்டார். இதனாலேயே முஸ்லிம்காங்கிரஸின் ஏனைய எம்.பிக்களும் அணி மாறும் நிலையில் உள்ளனர்:

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட அரசுடன் இணையுமானால் முஸ்லிம் காங்கிரஸின் நிலை என்னவாகும்?

அது மட்டுமன்றி, எமது நாடாளுமன்ற ஆசனங்களை வெறுமனே அலங்கரித்துக்கொள்ளாமல் உள்ள ஆசனங்களைப் பயன்படுத்தி முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் காங்கிரஸ் முன்வர வேண்டும்.

நாம் மக்களின் நலனின் என்றும் அக்கறையுடன் செயற்பட்டமையினாலேயே, மக்கள் எம்முடன் கைகோர்த்து நிற்கின்றனர். இதனால் மக்கள் வழங்கிய ஆணையினால் நாம் அதிகாரத்தைப் பெற்றுள்ளோம். இந்த அதிகாரம் மூலம் முடிந்தவரை பணியாற்றசித்தமாயுள்ளோம். ஏழை மக்களைக் கருத்திற்கொண்டே நாம் செயற்படுகின்றோம். எவரின் வாக்குகளுக்காகவும், நாம் சேவையாற்றத் தயாரில்லை.

அதுமட்டுன்றி, எமது பிரதேச அபிவிருத்திகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டுமாயின் உள்ளூர் அரசியல் தலைமைத்துவங்கள் தூர நோக்குடன் செயற்படவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில், இறக்காமம் ஜும்ஆ பள்ளித் தலைவர் எம்.எஸ். ஏ.மஜீது, முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் ஏ.இஸ்ஹாக் மற்றும் நியூ ஈஸ்டன் பஸ்கம்பனியின் பணிப்பாளர் அல்ஹாஜ், எம்.என்.நஸீர் உட்படப் பலரும் உரை நிகழ்த்தினர்.



ரெலிக்கொம்மின் யாழ். பிராந்திய அலுவலகம், தொலைத் தொடர்பு பராமரிப்புச் சேவை அலுவலகம் என்பன பண்ணையில் அமைந்துள்ள ரெலிக்கொம் கட்டடத் தொகுதியில் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி சுகி அனான், ரெலிக்கொம் யாழ். பிராந்திய அலுவலகக் கட்டட நாடாவை வெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும், பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி கபில சந்திரசேகர, ரெலிக்கொம் நிறுவனத்தின் வடக்குக் கிழக்குப் பொதுமுகாமையாளர் எஸ்.கனகசூரியர், ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி சுகி அனான், பிரதம நிர்வாக அலுவலர் ஜோசவ் ஆகியோர் (இடமிருந்து வலமாக) மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# எல்லையில் மற்றொரு நடவடிக்கைக்கு தயாராகிறது பாகிஸ்தான் இராணுவம்

ஆப்கானிஸ்தான் எல்லையில் வசிரிஸ்தான் பழங்குடியினர் பகுதியில் பதுங்கியுள்ள வெளிநாட்டுத் தீவிரவாதிகளைப் பிடிக்க, மற்றோர் இராணுவ நடவடிக்கைக்குப் பாகிஸ்தான் இராணுவம் தயாராகி வருகிறது. - என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பாகிஸ்தான் பழங்குடியினப் பகுதிகளில் அல்கெய்டா தீவிரவாதிகள் உட்பட, வெளிநாட்டுத் தீவிரவாதிகள் அதிகளவில் பதுங்கியுள்ளனா. அவ்களுக்கும் பழங்குடியின மக்கள் அடைக்கலம் கொடுக்கின்றனர். மலைகள் சூழ்ந்த இடமாக இருப்பதால் தீவிரவாதிகளுக்குப் பாதுகாப்பான இடமாக இப்பகுதிகள் உள்ளன.

கடந்த மார்ச் மாதம் எல்லைப் பகுதியில் உள்ள வசிரிஸ்தான் பழங்குடியினப் பகுதியில் அல்கெய்டா தவிரவாத அமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர் பதுங்கியிருப்பதாகத் தெரியவந்தது. இதை அடுத்து, பாகிஸ்தான் இராணுவம் அப்பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. அல்கெய்டா தீவிரவாதிகளுக்கு ஆதரவாக வெளிநாட்டுத் தீவிரவாதிகளும் பழங்குடியினரும் இராணுவத்துடன் சண்டையிட்டனர். இச்சண்டையில் இரு தரப்பிலும் ஏராளமான உயிர்ச்சேதம் ஏற்பட்டது. ஆனால், பதுங்கியிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட தீவிரவாதத் தலைவர் எவரும் பிடிபடவில்லை.

இந்நிலையில், இப்பகுதியில் பதுங்கியுள்ள வெளிநாட்டுத் தீவிரவாதிகளை ஒப்படைக்கும்படி பழங்குடியினத் தலைவர்களுக்குப் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இஸ்லாமாபாத்தில் அரேபிய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் முஷாரப் இந்த எச்சரிக்கையை விடுத்தார். (க)

# பி.பி.ஸி. ஊடகவியலாளர் சவூதியில் சுட்டுக்கொலை!

## மற்றொரு செய்தியாளர் காயம்

றியாத்,ஜூன்8

சவூதி அரேபியத் தலைநகர் றியாத் அருகே ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் லண்டன் பி.பி.ஸி. உலக சேவையின் ஒளிப்பதிவாளர் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றொரு செய்தியாளர் காயமடைந்தார்.

அயர்லாந்தவரான சிமன் கம்போர்ஸ் (வயது 36) பி.பி.ஸிக்காக ஈராக்கில் ஒளிப்பதிவாளராகவும் சுதந்திரப் பத்திரிகையாளராகவும் பணியாற்றிவந்தார். இவரே சம்பவத்தில் உயிரிழந்தார். பிரிட்டனைச் சேர்ந்த பிராங் கார்னர்(வயது 42), பி.பி.ஸியின் பாதுகாப்புச் செய்தியாளராகப் பணியாற்றிவந்தார். விசேடமான அல்கெய்டா பற்றிய விவகாரங்களில் அவர் புலமை பெற்றிருந்தார்.

பி.பி.ஸி. வெளியிட்ட செய்தி அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் அடையாளம் தெரியாத சிலரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று றியாத் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களைச் சுட்டவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களை மடக்குவதற்காகப் பொலீஸார் வலை விரித்துள்ளனர் என்று பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

சவூதி அரேபியாவின் கோபார் நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலின் பின்னர் இந்த இருவரும் அங்கு சென்றிருநதனர் என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. அங்கிருந்து அவர்கள் செய்திகளை அனுப்பிவைத்தனர் என்றும் அது தெரிவித்தது.

சிமன் கம்பேர்ஸ் மற்றும் பிராங் கார்னர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு பி.பி.ஸி. தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது. அவர்களுடன் தாங்கள் இன்னும் தொடர்புகளைப் பேணிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் ரிச்சர் சம்ருக், நாங்கள் அவர்களுக்கு வேண்டிய ஆதரவு அனைத்தையும் கொடுப்போம் என்றும் தெரிவித்தார்.

பிராங் ஜெண்டர் சவூதி அரேபியாவில் பலராலும் மதிக்கப்பட்ட ஒரு பத்திரிகையாளர் என்று பிரிட்டனுக்கான சவூதித் தூதுவர் இளவரசர் துர்கி அல் - பாசில் தெரிவித்தார்.

கோபார் நகரத் தாக்குதலின் பின்னர் வேறு பல தாக்குதல்களை நடத்தத் தீவிரவாதிகள் தயாராகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து பல நாடுகள் தமது பிரஜைகளை வெளியேறுமாறு கேட்டிருந்தன. இந்தநிலையில், பி.பி.ஸி. பத்திரிகையாளர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (க)

# றீகனின் உடல் புதன்கிழமை அடக்கம்

அமெரிக்க முன்னாள் அதிபர், றொனால்ட் றீகன் 10 ஆண்டுகளுக்கு மேலாகப் புற்றுநோய் மற்றும் 'அல்சிமர்' என்ற நரம்புத் தளர்ச்சி நோயாலும் பாதிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் அதிகாலை மரணம் அடைந்தார். அவரது உடல் லொஸ்ஏஞ்சல்ஸிலிருந்து வாஷிங்ரன் கொண்டுசெல்லப்பட்டது.

அங்கு இரு நாள்கள் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகிறது. மீண்டும் அவரது உடல் புதன்கிழமை கலிபோர்னியா கொண்டுவரப்பட்டு அங்குள்ள அருங்காட்சியகத்தில் அடக்கம் செய்யப்படுகிறது. (8)

# பாகிஸ்தானில் அல்கெய்டா தீவிரவாதி கைது!

இஸ்லாமாபாத்,ஜூன்8

அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி பாகிஸ்தானில் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானை ஒட்டிய பாகிஸ்தானின் எல்லையோரப் பகுதிகளில் பழங்குடி மக்கள் வசிக்கின்றனர். தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என சந்தேகிக்கப்படுவதால் பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது.

இந்நிலையில், அந்தப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தேடுத வேட்டையில் 24 வயதுடைய அல் கெய்டா தவிரவாதியைக் கைதுசெய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் இவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவரில்லை என்று தெரியவந்தது.

முதலில் தனது பெயர் அகித் ஆய்ஸ் என்றும் தான் பாகிஸ்தான் முஸ்லிம் என்றும் கூறிய அந்த நபர், பின்புதான் மொஸ்கோவைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து அவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் அல்கெய் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த என்பது தெரியவந்தது என அதிகாரிகள் கூறினர். இந்தத் தகவல்களை பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் சவுகத் சுல்தான் தெரிவித்துள்ளார். (க)

# பேனா துப்பாக்கிகள் வைத்திருந்த ரஷ்யப் பெண் ஸ்பெயினில் கைது!

மட்றிட்,ஜூன்8

ஸ்பெயின் நாட்டில் சட்டவிரோதமாக பேனா துப்பாக்கிகள் வைத்திருந்த ரஷ்ய நாட்டுப் பெண் ஒருவர் பொலீஸாரிடம் சிக்கினார்.

ரஷ்யாவில் இருந்து பலர் ஸ்பெயின் நாடு வழியாக சட்டவிரோதமாக துப்பாக்கிகளைக் கடத்துவது அதிகரித்து வருகிறது. இதனைத் தடுக்க ஸ்பெயின் பொலீஸார் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகர் மட்றிட்டில் பொலீஸார் நடத்திய சோதனையில் சந்தேகத்திற்கிடமான வகையில் இருந்த ரஷ்யப் பெண் ஒருவரைப் பிடித்து பொலீஸார் விசாரித்தனர். பேனாவைப் போன்ற அளவு மற்றும் வடிவில் அமைந்திருந்த சிறிய துப்பாக்கிகள் 38ஐ அவர் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பேனா துப்பாக்கிகள் வெள்ளியால் தயாரிக்கப்பட்டிருந்தன. இதையடுத்து, சட்டவிரோதமாக அந்தத் துப்பாக்கிகளை வைத்திருந்தார் என அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டார்.

அந்தப் பேனா துப்பாக்கிகளை நாங்கள் இதற்கு முன் பார்த்ததே இல்லை. அந்தப் பெண் ரஷ்யாவைச் சேர்ந்த துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதக் கடத்தல் குமபலைச் சேர்ந்தவர் என்று தெரியவருகிறதென ஸ்பெயின் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# பழங்காலப் புத்தர் சிலை பாகிஸ்தானில் கண்டுபிடிப்பு

இஸ்லாமாபாத்,ஜூன்8

மிகவும் பழைமையான புத்தர் சிலை பாகிஸ்தானில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஸ்வாமி மாவட்டத்தில் உள்ள அஜிஸ்தேரி என்ற இடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியின்போது இந்தப் புத்தர்சிலை கிடைத்துள்ளது. இத்தகவலை தொல்பொருள் ஆய்வுத் துறை அலுவலகம் கூறியுள்ளது.

இச்சிலை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தைய பழைமை வாய்ந்தது என்று அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. போதி சத்வ மைத்ரயா எனப்படும் இந்தப் புத்தர் சிலை ஒன்றரை அடி உயரம் உடையதாக உள்ளது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக அகழ்வாராய்ச்சி தொடங்கிவிட்டது. அப்போது பல்வேறு வகை கற்கள் கிடைத்தன. ஹங்கு மாவட்டத்தில் உள்ள நவகாய் என்னுமிடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியில் கற்குகைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த வகையில், இருபத்துநான்கு கற்குகைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன எனவும் அவை 10ஆயிரம் முதல் 40 ஆயிரம் ஆண்டுகள் பழைமையானவை என்றும் ஆராய்ச்சியில் தெரியவந்தது. (க)

# சூழலைப் பாதுகாக்கும் குட்டிக் கார்



ஜப்பானின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை சார்பில் டோக்கியோ நகரில் கார் கண்காட்சி நடைபெற்றது. சுற்றுச் சூழலைப் பாதிக்காத புகையில்லாத பெற்றோல், டீசலைப் பயன்படுத்தாத கார்கள் இதில் இடம்பெற்றன. சீரோ எலக்சீட் என்ற குட்டிக்கார் இந்தக் கண்காட்சியில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

இந்த மின்சாரக் காரிற்கு பெற்றோல் தேவையில்லை. இந்த ஸ்போர்ட்ஸ் மொடல் காரை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ரிகோ கொய்சி ஏறி உட்கார்ந்து சிறிது தூரம் ஓட்டிச் சென்றார். இதன் விலை 18 ஆயிரம் அமெரிக்க டொலர். 2 நாள்கள் இந்தக் கண்காட்சி நடக்கிறது. (8)

# புஷ்ஷுக்கு எதிர்ப்பு வலுக்கிறது

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். 2ஆம் உலகப் போர், முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் நினைவுதின நிகழ்ச்சியிலும் அவர் கலந்துகொண்டார். இந்த நிலையில் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கண்டனம் தெரிவித்து பாரீஸ் நகரில் பொதுமக்கள் பேரணி நடத்தினார்கள்.

ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்ததைக் கண்டித்து இந்தப் பேரணி நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் வங்களா தேசம் சென்றபோதும் இதேபோல அந்த நாட்டவர்கள் கண்டனப் பேரணி நடத்தினர். மேலும் சில ஐரோப்பிய நாடுகளில் புஷ் சுற்றுப்பயணம் செய்கிறார். அந்த நாடுகளிலும் இதே போல் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படலாம் என்பதால் சுற்றுப் பயணத்தை ரத்துச்செய்துவிடலாமா என்பது குறித்து அவர் யோசித்து வருகிறார். (8)

# பணக்கார மணமகளை மணக்கும் ஏழை மகன்

இந்திய சினிமாக்களிலும், கதைகளிலும் வருவதுபோல கற்பனைக்கு எட்டாத வித்தியாசமான திருமணம் ஒன்று சிங்கப்பூரில் சமீபத்தில் நடந்தது.

கோடீஸ்வர குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும், சாதாரண வியாபாரிக்கும் இடையே நடந்த இந்தத் திருமணத்தை அவ்வளவு எளிதாக யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

ஆனால், இந்தத் திருமணத்தை பெண்ணின் தாயும், மணமகனின் தாயும் ஏற்றுக்கொள்ள அப்படியே உற்றாரும் உறவினரும் ஆசீர்வதித்து ஏற்றுக்கொண்டனர்.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த அம்பலவாணர் செல்லத்துரை சிங்கப்பூரில் வியாபாரம் செய்துவருகிறார். 37 வயதான இவர்தான் இந்தக் கற்பனைக்கு எட்டாத திருமணத்தின் மணமகன். இருவருக்கும் ஜேர்மனியைச் சேர்ந்த ஸ்டில் தொழிற்சாலை உரிமையாளரின் கோடீஸ்வர மகள் ஒலிவியா ஹால்மேனுக்கும் இடையே இரண்டு வாரங்களுக்கு முன்னர் கோலாகலமாகத் திருமணம் நடந்தது.

அமைதியே வடிவான இந்த ஒலியாவைக் கண்டு ரசித்துள்ளார் செல்லத்துரை. இதை அறிந்த ஒலிவியாவின் தாய் வியாலோ ஹால்மேன், "நீங்கள் எனக்கு மகனாகவோ அல்லது மருமகனாகவோ இருக்கவேண்டும். அதுவே, எனது விரும்பம், நிறைவேற்றுவீர்கள் என நம்புகிறோம்" - என்று தன்மனத்தில் உள்ளதை செல்லத்துரையிடம் நேரடியாகக் கூறிவிட்டார்.

பின்னர், செல்லத்துரை மற்றும் தன் மகள் ஒலிவியாவின் ஒப்புதல் பெற்று திருமணம் செய்து வைப்பதாக உறுதி கூறியுள்ளார். ஸ்கொட்லாநதில் உள்ள பிரமாண்ட அரண்மனையில் உறவினர்களுக்கு விருந்து அளித்த பின் சந்தோஷத்தில், இந்தத் திருமண அறிவிப்பை வெளியிட்டார் வியாலோ ஹால்மேன்.

அக்லாந்து பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. பட்டம் பெற்ற செல்லத்துரையை ஒலிவியா ஹால்மேனுக்கு சொந்தமான நிறுவனங்களில் பொறுப்புக்களை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களின் ஆண்டு மொத்த வருமானம் 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய். இதுதவிர அமெரிக்கா, ஐரோப்பா, சிங்கப்பூரில் 11 மில்லியன் உள்ளன. மொத்தம் ஆயிரத்து 500 ஊழியர்கள் வேலைப் பார்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போ சொல்லுங்க கற்பனைக்கு எட்டாத ஜோடிதானே.

சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் நாளிதழ் இந்தச் செய்திய்ய வெளியிட்டுள்ளது. (க)

# கழுதைப் பால் அமோக விற்பனை!

மருத்துவகுணம் கொண்டது எனக்கூறி இந்தியா, தமிழகம் பெரம்பலூரில் கழுதைப் பால் அமோக விற்பனை செய்யப்படுகிறது. சிறிய டம்ளர் கொள்ளளவு கொண்டகழுதைப் பால் 60 ரூபாவரை விற்கப்படுகிறது.

பழங்காலத்தில் பால்வினை நோய், பெண்களுக்கு ஏற்படும் நோய்கள் உட்பட பல்வேறுபூச்சிக் கடியினால் ஏற்படும் புண்களுக்கு கிராமமக்கள் அந்தந்தப் பகுதியில் உள்நாட்டு மருத்துவரை அணுகுவர். நாட்டு மருத்துவர்கள் கழுதைப் பால் அல்லது சிறுநீரை அருந்துமாறு நோயாளிகளிடம் அறிவுறுத்தி அனுப்பி வைப்பர். நோயாளிகளும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள சலவைத் தொழிலாளர்களிடம் சென்று பாத்திரங்களை கொடுத்து கழுதை பால் மற்றும் கழுதை சிறுநீரை வாங்கி அருந்துவது வாடிக்கை. காலப் போக்கில் சலவைக்கும் நவீன இயந்திரங்கள் வந்துவிட்டதால் சலவை தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போனது. இதனால் கழுதைகளைப் பராமரிக்க முடியாத சலவைத் தொழிலாளர்கள் கழுதைகளை விரட்டி அடித்து வருகின்றனர். தற்போது கழுதைகள் சாலைகளில்தான் திரிகின்றன. பெரம்பலூர் பகுதியில் பால்வினை நோயைத் தீர்க்கும் என்பது உட்பட பல நோய்களை அண்டவிடாத மருத்துவ குணம் கொண்டது எனக்கூறி கழுதைப் பாலை மக்களிடம் விற்பனை செய்து வருகின்றனர் ஒரு பிரிவினர்.

கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடந்த பத்தாண்டுகளில் ஆண்டுதோறும் சராசரியாக 600,000 பீப்பாய்கள் எண்ணெய் கப்பல் விபத்துக்களின் மூலம் கடலில் சேர்ந்துள்ளன. இது 2002 ஆம் ஆண்டில் 'பிறிஸ்ரீஜ்' எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதால் கடலில் கலந்த எண்ணெயின் அளவைப் போலப் 12 மடங்குகளாகும்.

# இன்று வெள்ளிக் கிரகம் சூரியனைக் கடக்கிறது

**பூமிக்கும் சூரியனுக்குமிடையே அண்டவெளியில் - நேர்கோட்டில் - வெள்ளிக்கிரகம் கடந்து செல்கிறது. 122 ஆண்டுகளுக்குப் பின்னர் அண்டவெளயில் நிகழவுள்ள இந்த அரிய நிகழ்வு பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**


இன்று வெள்ளிக்கிரகம் தனது பயணப் பாதையில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் அண்ட வெளியைக் கடக்கும் நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இடம்பெறவுள்ள இந்நிகழ்வைக் காணக்கூடிய அரிய வாய்ப்பு, இலங்கை மக்களுக்குக் கிடைக்கவுள்ளது. 122 ஆண்டுகளின் பின்னர் இடம்பெறவுள்ள இநநிகழ்வை இலங்கையில் இருந்து அவதானிக்க முடிவது, எமக்குக் கிட்டியுள்ள அரிய வாய்ப்பெனவே கூறமுடியும். ஏனெனில், இத்தகைய நிகழ்வை உலகிலுள்ள சகல நாடுகளில் இருந்தும் அவதானிக்க முடியாது.

அண்டவெளியில் தத்தமது பிரயாணப் பாதையில் சஞ்சரிக்கும் வேளையில், குறிப்பிட்டதொரு சமயத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் சந்திரன் வரநேரும் வேளையில் சந்திரனின் நிழல் சூரியன்மீது படிகிறது. இதையே நாம் சூரியகிரகணம் என்று அழைக்கிறோம். அதே போன்று அண்டவெளியில் தனது பயணப்பாதையில் பூமிக்கும் சூரியனுககும் இடையில் வெள்ளிக் கிரகம் கடந்துசெல்ல நேரும் வேளையில், அதன் நிழல் சூரியன் மீது படிகிறது. ஆனால், அது சூரிய கிரகணம் என்று அழைக்கப்படுவதில்லை. வெள்ளிக் கிரகத்தின் கடப்பு (VENUS TRANSIT) என்றே அழைக்கப்படு கிறது.

பூமி வெள்ளிக்கிரகத்தில் இருந்து வெகுதொலைவில் இருப்பதால், வெள்ளிக்கிரகத்தின் நிழல் சூரியனில் படிவது எமக்குத் தெளிவாகத் தோற்றுவதில்லை. பதிலாக, ஒரு சிறு கருமையான தொகுதி சூரியனுக்குக் குறுக்காகப் பயணிப்பது போன்றே எமது கண்களுக்குப் புலப்படும் சூரியனின் விட்டத்தின் முப்பதில் ஒரு பங்குகொண்ட, அண்ணளவாகக் குறிப்பிடுவதனால் ஏறத்தாழ ஒரு ரூபாய் குத்தியொன்றின் அளவான கரும்புள்ளி ஒன்று சூரியக் கோளத்தின் நடுப்பகுதிக்குச் சற்றுக் கீழாக இடப்புறமிருந்து வலப்புறம் நோக்கி குறுக்காக மெதுவாக நகர்ந்து செல்வதை எம்மால் அவதானிக்க முடியும். இதனை இன்று இலங்கை நேரப்படி மாலை 3மணி 45 நிமிடம் முதல் சூரியன் மறையும் வரையில் இலங்கையில் அவதானிக்க முடியும்.

கோள்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் அமெரிக்க விஞ்ஞானியான ஜெரமியா ஹொரொக்ஸ் என்பவர் 1639ஆம் ஆண்டில் இத்தகைய கிரக சஞ்சார ஒழுங்குமுறையொன்றை முதன்முறையாக அவதானித்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அன்று முதல் 1761, 1769, 1874 மற்றும் 1882ஆம் ஆண்டுகளில் இவ்விதம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வெள்ளிககிரகம் தனது பயணப்பாதையில் கடந்து சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இறுதியாக 1882 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6ஆம் திகதியன்று பூமிக்கும் சூரியனுக்கும் இடையே தனது பயணப்பாதையில் வெள்ளிக்கிரகம் அண்டவெளியைக் கடந்து சென்றமை அவதானிக்கப்பட்டது. 122 ஆண்டுகளின் பின்னர் இன்று அதே விதத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் தனது பயணப்பாதையில் வெள்ளிக்கிரகம் கடந்து செல்லவுள்ளது. இந்நிகழ்ச்சியின் பின்னர் மீண்டும் 2012ஆம் ஆண டிலும் அதன் பின்னர் 2117ஆம் ஆண்டிலும் இவ்விதம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் அண்ட வெளியை ஊடறுத்து வெள்ளிக்கிரகம் தனது பயணப்பாதையில் சஞ்சரிக்கவுள்ளது.



இத்தகைய அபூர்வ நிகழ்வுக்கான காரணங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து நிரூபித்துள்ளனர். பூமியும் வெள்ளிக்கிரகமும் சூரியனைச் சுற்றி ஒரே சீரான மார்க்கத்தில் பயணிபதில்லை. பூமி பயணிக்கும் மார்கத்தில் இருந்து சற்றுச் சரிவான மார்க்கத்திலேயே வெள்ளிக்கிரகத்தின் பயணப்பாதை அமைகிறது. அண்டவெளியில் அவையிரண்டும்

## விஞ்ஞானிகள் காத்திருந்த அபூர்வ விந்தை பதிவாகும் நள் இது!!

சூரியனுக்கு நேராக ஒரே மட்டத்தில் பயணிக்காது வேறுபட்ட கோணங்களில் அவைகளின் பயணப்பாதை அமைவது இயற்கையின் விநோதமே.

பூமி சூரியனைச் சுற்றிவர ஓராண்டு காலம் எடுக்கிறது. அதேசமயம் வெளளிக்கிரகத்துக்கு ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படுகின்றன. பூமியும் வெள்ளியும் ஒரே விதத்தில் பயணிக்க முடியாமைக்கு இதுவுமொரு காரணமாகின்றது. எபோதாவது ஒரு தடவை இப்பயணமார்க்கங்களில் மாற்றம் ஏற்படுகிறது. எனவேதான் இந்த வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வு, சூரிய கிரகணத்தைப்போன்றோ சந்திர கிரகணத்தைப் போன்றோ ஒரே சீரில் இடம்பெறுவதில்லை. கடந்த நானூறு ஆண்டுகளுக்குள் சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும் நூற்றுக்கணக்கான தடவைகள் இடம்பெற்றுள்ளபோதும், இவ்வாறான வெள்ளியின் கடப்பு நிகழ்வு ஆறு தடவைகள மாத்திரமே இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு வெள்ளிக்கிரகம் தனது பயண மார்க்கத்தில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் நேர்கோட்டில் அண்டவெளியைக் கடக்கும் நேரம் பகல் பொழுதாக அமையும் நாடுகளில் மாத்திரமே அந்நிகழ்வை அவதானிக்க முடியும். எனவே, உலகம் பூராகவும் இவ்அபூர்வ நிகழ்வை பொதுமக்களால் கண்டுகளிக்க இயலாது.

இதற்கமைய இம்முறை வெள்ளிக்கிரகம் சூரியனுக்கும் பூமிக்குமிடையில் - நேர்கோட்டில் கடப்பதை, வட அமெரிக்கா, ஹவாய், ஆர்ஜன்ரீனா மற்றும் நியூசிலாந்து ஆகிய பிரதேசங்களில் உள்ளோர் தத் தமது நாடுகளில் இருந்துகொண்டே காண முடியாது. ஐரோப்பா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளில் - விசேடமாக இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ளோர் இதைத் தெளிவாகக் கண்டுகளிக்க முடியும்.

இந்த வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வை நேரடியாகச் சூரியனைப் பார்ப்பதால் மட்டுமே அவதானிக்க முடியுமாயினும், வெற்றுக்கணகளால் அதை அவதானிப்பதால் பார்வைப் பாதிப்பு ஏற்படும் அபாயம் உண்டு. எனவே, நீர் நிறைந்த பாத்திரமொன்றில் சூரியனது விம்பத்தைப் பிரதிபலிக்கச் செய்து, அதை அவதானித்துப் பார்ப்பதன் மூலம் வெள்ளியின் நிழல் சூரியனின் குறுக்கே பயணிப்பதைக் காணமுடியும். இந்த நிழல் சூரியனைக் கடந்து செல்வதற்கு 6மணி நேரம் எடுக்கும். ஆயினும், இலங்கையில் மாலை 3.45இற்குப் பின்னரே அது தென்படும் என்பதால், சூரியன் மறையும முன்னர் மட்டுமே அதை அவதானிக்க முடியும எனபதால் ஆகக்கூடியது இரண்டு மணித்தியால அவகாசமே எமக்கு உள்ளது.

விண்வெளிக் கோள்கள் தொடர்பான ஆராய்ச்சி நிபுணர்களும் பயிற்சியாளர்களும் இம்முறை இக்கால அவகாசத்தில் விசேட சக்திவாய்ந்த நுண்தொலைநோக்கிக் கருவிகள் மூலம் அதன் நகர்வை அவதானிக்கவுள்ளனர். ஆயினும், பொதுமக்கள் தொலைநோக்கியொன்றின் மூலமாகவோ அல்லது வேறு சாதனங்கள் மூலமாகவோ நேரடியாகச் சூரியனைப் பார்க்கக்கூடாது என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் இந்நிகழ்வை அவதானிக்கவேண்டுமாயின் சூரியக் கிரகணத்தை அவதானிப்பதற்கென பயன்படுத்தப்படும் விசேட கண்ணாடிகளைப் பயனபடுத்தியே அவதானித்தல் வேண்டும். அல்லது மின் ஒட்டுத் தொழிலாளர்கள் பயன்படுத்தும் கண்ணாடிகளையும் பயன்படுத்தலாம். இருப்பினும், ஆரம்பத்தில் கூறப்பட்ட தண்ணீர்ப் பாத்திரம் மூலம் அவதானிப்பதே பாதுகாப்பானதாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து இதை அவதானிக்கவுள்ள விண்வெளிக் கோள்கள் தொடர்பான ஆராய்ச்சியாளர்கள், இது தொடர்பான பொருந்தப்படுத்தப்பட்ட புகைபடங்களை சர்வதேச வலைப்பின்னலுக்கு அனுப்பி வைக்க இருப்பதால், வலைபபின்னல ஊடாக உலகிலுள்ள சகலரும இதைக் கண்டுகளிக்க முடியும்.

இந்த வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வு குறித்து அவதானிப்பதன் மூலம் பெறப்படும் தகவல்களைக் கொண்டு பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரத்தை நிர்ணயிக்கக் கூடிய வாய்ப்பைப் பெற முடியும் என்பதே இதன்மூலம் கிடைக்கூடிய பெறுமதிமிக்க பலாபலனாகும்.

கோள்கள் பற்றி விஞ்ஞான ரீதியில் ஆய்வுகளை மேற்கொண்டு வரும் கோள் ஆராய்ச்சி மையம், (AV) தற்போது தாம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் உள்ள தூரத்தை சரியாகக் கணக்கிட்டுள்ளதாக தெரிவித்துள்ளபோதும் ராடர் கருவிகள் மற்றும் செயற்கைக் கோள்கள் போன்ற உபமார்க்கங்களைக் கொண்டு பெறப்பட்ட தகவல்கள் மூலமே அத்தகைய முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதே உணமையாகும். இருந்த போதிலும், இவ்வசதிகள் எதுவுமற்ற முன்னைய காலத்தில் கோள்களைப் பற்றி ஆராய்ந்துள்ள விஞ்ஞானியான எட்மண்ட் ஹெலி என்பவர், கோள்களின் இடைத் தூரத்தைக் கண்டறியும் கணித முறையொன்றை அறிமுகப்படுத்தியிருந்தார். அதற்கான தகவல்கள் இந்த வெள்ளிக்கிரகக் கடப்பு நிகழவுகளின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டதாகத் தெரிகிறது.

ஆனால், அவரது வாழ்நாளில் இத்தகைய வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வொன்று நிகழாமையால், அவரால தனது கணித முறையைப் பயன்படுத்தி கணிப்பிட இயலாது போயிற்று. என்றாலும், பிற்காலத்தில் வாழ்ந்த ஆய்வாளர்கள், வெள்ளிக்கிரகத்தின் இத்தகைய கடப்பு நிகழ்வுகளின் அனுபவங்களை மூலம் பூமிக்கும் சூரியனுககும் இடையிலுள்ள தூரத்தை ஆராயந்துள்ளனர்.

கோள்களைப்பற்றி ஆய்வு மேற்கொள்ளும் பயிற்சியாளர்கள், இந்தக் கணித முறையை தற்போதும் கைக்கொண்டு வருகின்றனர். அவர்கள் கடந்த வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வின்போது பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு இந்தக் கணித முறையில் உள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டுள்ளனர். இந்தப் பயிற்சியாளர்களும் ஆய்வாளர்களும் உண்மையான வெள்ளிக்கிரக கடப்பொன்று நிகழும் வரையில் பொறுமையுடன் காத்திருப்பதற்குக் காரணம். இது நிகழும் போது கிடைக்கும் தகவல்களைக் கொண்டு கோள்கள் தொடர்பான விஞ்ஞானக் கணிப்பீட்டின் பெறு பேற்றை துல்லியமாகக் கணக்கிட வேண்டுமென்ற எதிர்பார்ப்பினாலாகும்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இத்தகைய கோள் ஆராய்ச்சி நிபுணர்கள், வெள்ளிக்கிரக கடப்பு நிகழ்வு தென்படும் நாடுகளுக்கு ஏற்கனவே சென்று தங்கியுள்ளனர். அவர்கள் இவ்வாறு பெருமுயற்சி செய்வது இந்தப் பெறுமதிமிக்க ஆறு மணித்தியாலய நேரத்திற்குள் பெறக்கூடிய அதிகபட்ச பயன்பாட்டைப் பெறும் நிமிர்த்தமேயாகும். இவர்கள் அனைவரும் தமது ஆராய்ச்சிகளுக்கு உதவும் வகையில் எடுத்துச் சென்றுள்ள உபகரணங்களுடன் மனதில் பெரும் பிரார்த்தனை ஒன்றையும் சுமந்து சென்றுள்ளனர். வெள்ளிக்கிரக கடபபு நிகழ்வு இடம்பெறும் தருணத்தில், அண்டவெளியில் மேகங்கள் திரண்டு தமது முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்திவிடக்கூடாது என்பதே அப் பிரார்த்தனையாகும். ஏனெனில், நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஆவலுடன எதிர்பார்த்திருந்த இந்த பொன்னான சந்தர்ப்பம் பாழாகிவிடக் கூடாதே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில் எழுவது நியாயமானதொன்றே யாகும். ★

**தொகுப்பு: சரா**

## பொது ஆட்சியியல் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜூன்8

கலாநிதி எஸ்.கே.எஸ்.நாதன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் கே.ரீ.கணேசலிங்கம் ஆகியோர் எழுதிய 'பொது ஆட்சியியல்' என்னும் நூலின் வெளியீட்டுவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறும்.

அரசறிவியல் ஒன்றியத்தின் தலைவர் எம்.ரஜீதரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வரலாற்றுத் துறைப் பேராசியரிர் எஸ்.கிருஸ்ணராஜா அறிமுகவுரையையும் அரசறிவியல்துறைப் பேராசிரியர் ஏ.வி.மணிவாசகம் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவர்.

நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா, பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் ஆகியோர் பாராட்டுரைகளை நிகழ்த்துவர். வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி.புஷ்பரட்ணம் முதல் பிரதியைப் பெறுவார். (-3)


## மரண அறிவித்தல்

### அமத்தோர் அல்போன்ஸ்

சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பு பத்திமாகிரியை வசிப்பிடமாகவும் கொண்ட அமத்தோர் அல்போன்ஸ் நேற்று (07.06.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமத்தோர் - அன்னம்மாவின் மூத்த மகனும் நேசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சேவியர், மரியதாஸ், ஜேசுதாஸ், பிலோமினா மற்றும் அருள்மரியாம்பிள்ளை, மரியறோசலின், ஜோசப்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் மேரி ஞானேஸ்வரி, றீற்றாஜெயதேவி, மேரிபுஸ்பராணி, அன்ரனிமலர், றோஸ்மலர் (லண்டன்), லில்லிமலர் (லண்டன்), நிறஞ்சிதமலர் (லண்டன்), ஜோதிமலர், மரியகொன்சன்ரையின் (டோகா), அன்ரன் ரஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பற்றிக் ஜெபநேசன், சாள்ஸ் இருதயநாதன், ஜோசப், ஜோசப் எக்ஸ்பெரிஞ், பிலிப்பையா (லண்டன்), சிவசெந்தில்நாதன் (லண்டன்), அன்ரன் ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2004) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புனித பத்திமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா கிரி,
பண்டத்தரிப்பு. (32838) (34-14-16-26)

தகவல்:
அ.றஜீந்திரன் (மகன்).

## புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்

### தேவை-கலைப்பட்டதாரி

தரம் 9இல் இருந்து 13 வரைக்கான வகுப்புகளுக்கு தமிழ்ப்பாடம் கற்பிக்கக்கூடிய கலைப்பட்டதாரி தேவை. முழு சுயவிவரங்களுடன் 14.06.2004 ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

- அதிபர்.

(சீ-35486) (32-14-16-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

பிறப்பு 30 - 05 - 1956



இறப்பு 11 - 05 - 2004

அமரர்

### சபாபதிப்பிள்ளை கேசரிமாயவன்

*பாசமும் நேசமும் பண்பும் நிறைந்த அன்புத் தெய்வமே*
*ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (09.06.2004) புதன்கிழமை காலை 6 மணியளவில் குருக்கட்டுச் சித்திவிநாயகர் ஆலயவீதியில் நடைபெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வல்லிபுரக்குறிச்சி,*
*புலோலி*
(சி-35476)(43-14-16-26)

*என்றும் உங்கள் நினைவில் வாழும்:*
அன்பு மனைவி,
பிள்ளைகள்.

உதயன்

# இணக்கமில்லா நாடாளுமன்று பிணக்கிற்கே வழிசெய்யும்

நாடாளுமன்றம் இன்று மீண்டும் கூடுகின்றது. நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் சிறுபான்மை அரசு இரண்டு முக்கிய கட்டங்களைத் தாண்டிவிட்டது. நாடாளுமன்றத்தின் இரண்டு முக்கிய அமர்வுகள் கடந்துவிட்டன.

முதல் அமர்வில் நாடாளுமன்றின் உயர் பதவியான சபாநாயகர் தெரிவில் கோட்டைவிட்ட அரசுத் தரப்பினால் இரண்டாவது அமர்வில் எதிரணியுடன் இணக்கம் கண்டதன் மூலம் உபசபாநாயகர் பதவியையாவது தக்கவைத்துக் கொள்ளமுடிந்தது.

மீண்டும் இன்று நாடாளுமன்றம் கூடுகின்றது. ஆனால், சிறுபான்மை அரசு தனக்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு உரிய எண்ணிக்கையான எம்.பிக்களின் ஆதரவை இன்னும் திரட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. 'குதிரையோட்ட' முயற்சிகள் மும்முரமாக நடந்தன. ஆனாலும் இன்னும் அரசுக்கு வாய்ப்பான சூழ்நிலை எட்டவில்லை எனத் தெரிகின்றது.

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து 'பல்டி' அடித்த பைலா மற்றும் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோர் அரசுத் தரப்புக்குப் பின்னால் அணிதிரளுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. தவிரவும், ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து அரசுத் தரப்புக்கு அணிமாறிய இரண்டு பிக்கு எம்.பிக்களில் ஒருவரின் பதவி குறித்த சர்ச்சை நீதிமன்றத்தில் இருக்க, மற்றவர் தொடர்ந்து அரசுக்கு ஆதரவளிப்பார் எனத் தெரிகின்றது. இவர்களோடு சேர்ந்தாலும் அறுதிப் பெரும்பான்மையைத் தற்காலிகமாகப் பெறுவதற்கும் இன்னும் ஓரிரு எதிரணி எம்.பிக்களின் ஆதரவும் அரசுத் தரப்புக்கு தேவை. அது இப்போதைக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தென்படவில்லை.

அறுதிப்பெரும்பான்மை இல்லாத அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டி என்ன சாதிக்கப்போகின்றது? இரண்டு விடயங்களைச் செய்யலாம்.

ஒன்று - எதிரணியில் மேலும் ஒருசில எம்.பிக்களுக்கு உடன்பாடான சட்டங்களை சமரசமாக நிறைவேற்றச் செய்யலாம்.

மற்றது - வெறுமனே அரசியல் விவகாரங்களை அலசும் 'அரட்டை அரங்கமாக' - பேசிக் கழிக்கும் இடமாக - நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தலாம்.

இரண்டாவது விடயம்தான் இப்போது பெரும்பாலும் நாடாளுமன்றத்தில் நடக்கின்றது. அந்த அரட்டை அரங்கம் கூட அநாகரிகமான அரங்கமாக மாறுவதும் அடிக்கடி நடக்கின்றது.

இக்கட்டான காலகட்டத்தை நாடு கடக்கும் இச்சமயத்தில் உறுதியற்ற - ஸ்திரமற்ற - முக்கிய சட்டங்களை நிறைவேற்றக்கூடிய பலமற்ற - ஓர் அரசு ஆட்சியில் இருப்பது மிக மோசமானதாகும்.

அரசியல் விவேகமும் தீர்க்க தரிசனமும் இன்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த நடவடிக்கைதான் இந்த ஸ்திரமற்ற நிலை ஏற்படக் காரணம்.

ஆறு வருடத்துக்கு ஆட்சி செய்வதற்கு அறுதிப் பெரும்பான்மையோடு மக்கள் ஆட்சிப் பீடத்துக்கு அனுப்பிவைத்த அரசை, தனது குறுகிய அரசியல் லாபங்களுக்காகக் கலைத்தது முதல் -

ஒன்றிணைந்து செயற்படுவதற்கான கொள்கைப் போக்கு இல்லாத தரப்புகளை ஆட்சியைக் கைப்பற்றும் இலக்குக்காக கூட்டணி அமைக்க வைத்தது.

ஸ்திரமற்ற ஆட்சி உருவாகச் செய்தது வரை-

அனைத்துமே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கைங்கரியங்கள் தான்.

இக்கட்டிலிருக்கும் நாடு, நாடாளுமன்றம் மூலம் சட்டத்தினாலும், நிதிக் கூற்றுக்கள் வாயிலாகவும் நிறை வேற்றவேண்டிய பல பணிகளை ஸ்திரமற்ற அரசு ஆட்சியிலிருக்கும் இந்த நிலைமையில் நிறைவு செய்ய முடியாமல் சிக்கித் தவிக்கப்போகின்றது; நெருக்கடிகளை எதிர்கொள்ளப்போகின்றது.

அத்தகைய சிக்கல்களை வெற்றிகரமாகக் கடக்கக்கூடிய அரசியல் இணக்கப்பாடு, பல்வேறு தரப்புகளிடையே ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் தென்படவில்லை. மாறாக அரசியல் முரண்பாடுகளும், பழிவாங்கும் போக்கும், தரப்புகளுக்கிடையிலான குரோதங்களும் மேலோங்கி வருகின்றன. இதனால், ஸ்திரமற்ற அரசு இருந்தாலும் நாடாளுமன்ற விடயங்களை தரப்புகளுக்கு இடையிலான ஒருமுகப்பட்ட செயற்பாடுகள் மூலம் வெற்றிகரமாகக் கொண்டுநடத்தும் சாத்தியப்பாட்டைத் தருவனவாக இல்லை.

எனவே, குழப்பகரமான நாடாளுமன்றச் செயற்பாட்டின் விபரீத விளைவுகளை நாடு எதிர்கொள்ள வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாததாகத் தென்படுகின்றது.

இனப்பிரச்சினை என்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரத்துக்கு இணக்கத்தீர்வு காண வேண்டிய ஓர் அவசரமான - அவசியமான - சிக்கலான - இந்தக் காலகட்டத்தில், முடிவெடுக்கும் அதிகாரமற்ற நிலையில் ஒரு ஸ்திரமற்ற அரசு ஆட்சியிலிருக்கும் நிலை ஏற்பட்டமை தேசிய மட்டத்தில் பெரும் சாபக்கேடாகிவிட்டது.



இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பரிசினைப் பெற வருகைதந்த மலையக எழுத்தாளர்கள், மலையக இலக்கியத்திற்கு பெரும் பணியாற்றிய மூத்த எழுத்தாளர் நந்திக்கு (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களுக்கு) பொன்னாடை போர்த்தி அவரைக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். சாரல் நாடன், அந்தனி ஜீவா, ப.ஆப்டீன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# வறுமைக்கோட்டின் வருமான வரம்பை 3 ஆயிரமாக அதிகரிக்கக் கோரிக்கை

## ஜனாதிபதிக்கு மாவை எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ். மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வருமான வரம்பு எல்லையை மூவாயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும். அத்துடன், கடந்த ஜனவரியிலிருந்து நிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் மக்களுக்கு வழங்கவேண்டும்.

- இவ்வாறு கோரி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த இரு தசாப்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு விநியோகமானது, கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நீதியற்ற முறையில் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், பிறரில் தங்கியிருப்பவர்கள், விதவைகள், அநாதைகள், வேலையற்றோர், இடம்பெயர்ந்தோர், தமது சொந்த இருப்பிடங்களை இழந்தவர்கள் அடங்கலாக ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மிகுந்த வறுமையில் மரணத்தை எதிர்நோக்கவேண்டிய நிலையிலுள்ளனர்.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்குக் கடந்த மார்ச் மாதம்வரை உலர் உணவு வழங்கப்பட்டது. ஆனால், யாழ் மாவட்ட மககளுக்கான உலர் உணவு விநியோகம் கடந்த ஜனவரி மாதத்திலேயே நிறுத்தப்பட்டதற்கான அடிப்படைக்காரணம் என்ன என்பது தெரியவில்லை.

மாற்றுவழிகள் முன்னெடுக்கப்படும்வரை உலர் உணவு விநியோகத்தைத் தொடர்ந்து செயற்படுத்த உள்ளதாக புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் ஆணையாளர் நாயகம், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோர் கடந்த மாதம் 27ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் பல்வேறு சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் தெரிவித்தனர். ஆனால், அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆயிரத்து 500 ரூபா வருமானத்தை மாதாந்தம் பெறும் குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்படுகின்றது. இந்த வறுமைக் கோட்டு வருமான எல்லையை 3ஆயிரமாக உயர்த்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று தெரிவிக்கப்படுகிறது. (4-ரி)

## உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள

# சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் செல்ல மேலும் இரு ஊழியருக்கு இராணுவம் அனுமதி மறுப்பு

வலி.வடக்கு,ஜூன்8

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் இரண்டு ஊழியர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தமது பணிமனைக்குச் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனை உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மாற்றப்பட்ட காலம் முதல் இந்த இரு ஊழியர்களும் அங்கு இராணுவத்தினரின் அனுமதியுடன் சென்று கடமையாற்றி வந்தனர். திடீரெனக் கடந்த வாரம் முதல் இவர்கள் இருவரும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தமது அலுவலகத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்க முடியாதென சோதனைச் சாவடியில் உள்ள இராணுவத்தினர் மறுப்புத்தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோதிலும், இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, இப்பணிமனையில் கடமையாற்றும் இரண்டு ஊழியர்கள பணிமனைக்குச் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. தற்போது மேலும் இருவர் அங்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளமையினால் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் பல்வேறு கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கின்றது.

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இந்த அலுவலகம் இயங்குவதை இராணுவம் விரும்பவில்லை என்றும், ஊழியர்கள் அலுவலகத்திற்குச் செல்வதை மட்டுப்படுத்தி அலுவலகத்தை இயங்கவிடாது தடுப்பதற்காகவே அவர்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர் எனவும் பொதுமக்கள் தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது. (8-86)

## மாகாணசபைத் தேர்தலின் பின்னர் எரிபொருள்களின் விலை அதிகரிக்கலாம்

கொழும்பு,ஜூன்8

உலகச் சந்தையில் பெற்றோலிய எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்யும் நோக்கில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களுக்குப் பின்னர் எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதென அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாகத் தீர்மானிக்கும் பொருட்டு ஏற்கனவே அமைச்சரவைக்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பினும், மாகாணசபைத் தேர்தல்களைக் கருத்திற்கொண்டு இம்முடிவை மாகாணசபைத் தேர்தல்கள் முடிவுற்ற பின்னரே நடைமுறைப்படுத்துவதென அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

அவ்வித விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டால் மின்சாரக கட்டணங்கள் உட்பட பொதுமக்களின் நாளாந்தப் பாவனைப் பொருளகளின் விலையிலும் அதிகரிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதெனச் சுட்டிக்காட்டப்படுகிறது. (10)

# யாழ். ப.நோ.கூ.சங்க அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன்திட்டம்

## அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தகவல்

கொழும்புத்துறை,ஜூன்8

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின அனுசரணையுடன் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

சங்க அங்கத்தவர்களின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் வகையில் யு.என்.டி.பி. நிறுவனம் வழங்கியுள்ள நிதியுதவியுடன் சங்க நிதியையும் சேர்த்து சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தி வருவதாக யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற யு.என்.டி.பியின் சுழற்சி முறைக்கடன் வழங்கல் தொடர்பான கருத்தரங்கில் தலைமையுரை நிகழ்த்தும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் கடன்பெறும் பயனாளிகள், கிளைக்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

எமது சங்க எல்லைப்பரப்பினுள் வாழும் சகல அங்கத்தவர்களின் முழுமையான தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது. இந்நிலையில், எமது சங்கத்தின் கிராமிய வங்கியூடாக யு.என்.டி.பி.நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் கட்டம் கட்டமாக சுழற்சிமுறையில் அங்கத்தவர் களுக்கு கடனை வழங்கி அவர்களின் வாழ்வியல் நிலையை மேம்படுத்தும்.

இத்திட்டத்திற்கு சகல அங்கத்தவர்களும், கிளைக்குழு உறுப்பினர்களும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களான சு.கணேசு, இ.புவன்ராஜ், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கல்வி உத்தியோகத்தர் வி.கே. சிவசுந்தரம் மற்றும் யு.என்.டி.பி. நிறுவன அதிகாரிகளும் உரையாற்றினார்கள். (8-30-17)

### நாளை

வைகாசி 27
புதன்கிழமை
(09.06.2004)
திதி : ஸப்தமி
இரவு 08.02 வரை.
நட்சத்திரம் : சதயம்
இரவு 09.44 வரை
சுபநேரம்: 4.22 - 05.52
ராகுகாலம்: 11.52-01.22
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பழமையிலிருந்து கடைந்தெடுத்தது அறிவு. எதிர்காலத்துக்கு நம்பிக்கை தருவது அழகு.

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறிமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 09.06.2004 மாலை விநியோகிக்கப் படும். பதிவுகளை முன்கூட்டியே மேற் கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No: 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (32771)

27/17, புங்கங்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன் - சமுர்த்தி வங்கிக்கு முன ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாக னத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்ப னைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

நல்ல நிலையிலுள்ள 8ஸ்ரீ 5497 இலக்கமுடைய "பேர்ஜோ" கார் விற் பனைக்குண்டு. தொடர்பு:சுவாமி சித் ரூபானந்தா, சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை.T.P.:226-3465.(32833)

### மணமக்கள் தேவை

இந்து, கிறிஸ்தவர்கள், டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், அரச உயர் பதவிவகிக்கும் மற்றும் வெளி நாட்டு மணமக்களுக்குத் தகுந்தவரன் கள் தேவை. தொடர்பு: சிவாலயா, சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநா தர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (32827)


## சீருடைத்துணி வழங்கப்படுகிறது

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் பாட சாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி அந்தந்தக் கிராமசேவை அலு வலா ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்குப் பாடசாலை மாணவர்கள், அந்தந்தக் கிராமசேவகர் களிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளு மாறு மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை கேட் டுள்ளார். (36)

## ஜப்பானியத் தூதரக அதிகாரிகள் குழு அம்பாறை விஜயம்

கொழும்பு,ஜுன்8

ஜப்பானிய தூதரகத்தின் செய லாளர் கே.இலாஸ்திக்கா தலைமை யிலான உயர் மட்டக்குழுவொன்று அம்பாறை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம்செய்துள்ளது.

இந்தக் குழுவினர் பொத்துவில், பாணமாப் பகுதிகளுக்குச் சென்று விவசாயிகள், மீனவர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றிக் கேட்ட றிந்து கொண்டனர் எனவும் கூறப்பட் டது.

மீனவர்களை மீன்பிடி இறங்கு துறைகளிலும், விவசாயிகளைக் கம நலச் சேவைத்திணைக்களங்களி லும் சந்தித்துக் கலந்துரையாடினார் கள். நேற்று இவர்கள் திருக்கோவில், அக்கரைப்பற்று, வாழைச்சேனை ஆகிய பகுதிகளுக்கும் சென்று நிலை மைகளைப் பார்வையிட்டனர்.

இதேவேளை, இன்று செவ்வாய்க் கிழமை சாய்ந்தமருது, கல்முனைப் பகுதிகளுக்கும் இவர்கள் செல்ல விருக்கின்றனர். (4-ரி)

## குளிர்சாதனப் பெட்டி அன்பளிப்பு

தென்மராட்சி,ஜுன்8

பட்டினிக்கு எதிரான இயக்க நிறு வனத்தினர் பளை ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதனப் பெட்டி ஒன்றினை அன் பளிப்பாக வழங்கியுள்ளனர். அதற் கான மின்சாரத்துக்கென இரண்டு சோலர் கருவிகளும் வழங்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-117)


### விற்பனைக்கு

சொந்தப் பாவனையிலுள்ள 10ஸ்ரீ தொடரிலக்கமுடைய "வோக்ஸ் வகன்"கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.555 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கிழமை நாள்களில் காலை 9.00 முதல் மதியம் 1.00 வரை. (32824)


# புலிகள் குறித்த ஜே.வி.பியின் கருத்தை கவனத்தில் எடுக்கத் தேவையில்லை

## சந்திரசேகரன் எம்.பி. அறிக்கை



கொழும்பு,ஜுன்8

விடுதலைப் புலிகள் தொடர்பாக ஜே.வி.பியினர் முன்வைக்கும் கருத் துக்களை நாம் கவனத்தில் கொள் ளத்தேவையில்லை - இவ்வாறு தெரி வித்திருக்கிறார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான பெ.சந்திர சேகரன்.

இடைக்கால நிர்வாகசபை தொடர் பான கோரிக்கையினைப் புலிகள் கைவிட வேண்டுமென்ற தொனியில் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள கருத்துக் கள் தொடர்பாக சந்திரசேகரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

ஒருகாலகட்டத்தில் ஆயுதமேந்திப் புரட்சி செய்வதாகக் கூறிய இவர் கள், இன்று நாடாளுமன்ற ஆசனங் களைக் கூட்டிக்கொள்வதற்காகப் பேரம் பேசுகிறார்கள்.

சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளச் சகலவிதமான குறுக்கு வழிகளையும் கையாளுகின் றனர்.

இனவாதமும்,மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் செய்கைகளுமே ஜே.வி.பியின் அரசியல் மூலதனமாக இருக்கின்றது.

இனப்பிரச்சினை தீர்ந்து நாட்டில் அமைதி ஏற்பட்டு விட்டால் இவர்க ளின் இனவாதமும் குறுகிய அரசியல் யுக்திகளும் மக்கள் மத்தியில் எடு படாமல் போய்விடும்.

தமிழர்களின் பிரச்சினை இன்று சர்வதேசத்தை ஈர்த்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் தமிழர்களுக்கு உரிமை கொடுக்கப்படவேண்டுமென் பதை ஏற்றுள்ளன.

உரிமைகளையும், சுதந்திரமான விடுதலையினையும் பெறுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அரசி யல் ரீதியில் நீண்டதூரம் சென்று விட்டார்கள்.

இந்த யார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத ஜே.வி.பியினரின் கருத் துக்களுக்கு முக்கியத்துவம் அளிக் கத்தேவையில்லை. நாட்டில் இனவா தம் படிப்படியாக இல்லாது போகும் போது ஜே.வி.பியும் இல்லாது போகும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. (4-ரி)

# தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாதீர்

## கடற்படைத் தளபதிக்கு ஜயலத் கடிதம்



கொழும்பு,ஜுன்8

இனப்பிரச்சினை காரணமாக இந் தியாவின் தமிழ்நாட்டில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கை வரும்போது அவர் களுக்கு எந்த இடையூறுகளும் ஏற் படுத்தப்படக்கூடாது.

- இவ்வாறு கோரி முன்னாள் புனர் வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சரும் தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினருமான டாக்டர் ஜய லத் ஜயவர்த்தன இலங்கைக் கடற் படைத் தளபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

இலங்கைப் பிரச்சினையால் புலம் பெயர்ந்து இந்தியாவின் தமிழ்நாட்டு அகதிமுகாம்கள் மற்றும் உறவினர், நண்பர் வீடுகளில் சுமார் 2 லட்சம் பேர் வசித்துவருகின்றனர். அவர்க ளில் கணிசமான அளவினர் தற் போது தாயகத்திற்குத் திரும்புகின் றனர். அவர்கள் அவ்வாறு திரும்பி வந்திறங்கும்போது மன்னார், யாழ்ப் பாணம் மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் கடற்படையி னரால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர் என்று பத்திரி கைச் செய்திகளிலிருந்து அறிகிறேன்.

கடந்தகாலத்தில் அகதிகள் புனர் வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச் சராக நான் இருந்தபொழுது அகதி களுக்கான ஐ.நா.தூதரகம், வெளி நாடுகளிலிருந்து திருப்பியனுப்பப்படு பவர்களின் நலன்பேணும் அமைப்பு ஆகியவற்றுடனும் மன்னார் மாவட்ட அரச அதிபருடனும் இணைந்து இலங்கை அகதிகள் குறித்த விடயங் களில் மிக அக்கறையுடன் செயற்பட் டேன்.

தற்போதைய அரசாங்கத்தில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக் கான அமைச்சர்கள் எவரும் நியமிக் கப்படவில்லை. ஆனால், இலங்கை அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது குறித்துக் கவனமெடுத்து இலங்கை அகதிகள் இந்தியாவிலி ருந்து எதுவித தடையுமின்றிப் பாது காப்பாகத் தாயகம் திரும்புவதற்கு உதவவேண்டும். (4-ரி)

# சமய அறிவுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்8

வேலணை பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளை யார்) ஆலய வருடாந்த மஹோற் சவத்தை முன்னிட்டு மேற்படி ஆலய அறநெறிப்பாடசாலை மாணவ, மாண வியரிடையே நடத்தப்பட்ட சமய அறி வுப் போட்டியில் பரிசு பெற்றவர்க ளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள் ளன.

மத்தியபிரிவு, கீழ்ப்பிரிவு என்ற ரீதியில் நடத்தப்பட்ட இப்போட்டியின் முடிவுகள் வருமாறு:-

**மத்தியபிரிவில்**

1ஆம் இடம்: பா.சாம்பவி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

2ஆம் இடம்: த.றஜித்தா (வேலணை நடராசா வித்தியாலயம்)

3ஆம் இடம்: கு.நிசாந்தினி (வேலணை நடராசா வித்தியாலயம்)

**கீழ்ப்பிரிவில்**

1ஆம் இடம்: கு.லோஜினி (வேலணை நடராசா வித்தியாலயம்)

2ஆம் இடம்: பா.செந்தூர்ச் செல் வன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை)

3ஆம் இடம்: க.சுபாஸ்திகா (வேலணை நடராசா வித்தியாலயம்)

பாலர் பிரிவைச் சேர்ந்த சி.சிவ குமர், கு.கம்சிகா, கு.கலாதரி ஆகி யோருக்கும் பரிசுகள் வழங்கப் பட்டன. (4)

---

நெஞ்சை விட்டு அகலாத

## மூன்றாவது ஆண்டு நினைவுகள்

அன்னை மடியில் 16 - 02 - 1977



ஆண்டவன் அடியில் 27 - 05 - 2001

### அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

திதி: ஷஷ்டி

நீ நன்கு வளர்ந்து எமக்கு மரமாய் நிழல் தருவாய்
என்றிருக்கத் தனிமரமாய்த் தவியாய்த் தவிக்கவிட்டுவிட்டு
எங்கள் அன்புச் செல்வமே! நீ எம்மை விட்டுப்பிரிந்து
விரைவாகச் சென்றதென்ன? பார்க்குமிடமெல்லாம்
உன்பாசமுகம் தான் தெரிகிறதே!

என்றும் உன் நினைவுகளுடன் கலங்கும் விழிகளோடு:
அன்பு அப்பா, அம்மா, சகோதரிகள்,
மற்றும் உற்றார், உறவினர்,நண்பர்கள்.

தகவல்:
ரமேஷ்குமார் நஜித (மருமகன்).
3/3, பத்திரகாளி கோயிலடி,
யாழ்ப்பாணம். (32826)(34-11-16)

---

## 5ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மலர்வு 1947 - 09 - 04



உதிர்வு 1999 - 06 - 05

### அமரர் வல்லிபுரம் முருகையா

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

திதி: 08.06.2004

எமக்குயிர் தந்த தந்தையே!
பாச மழையில் எம்மை
மூழ்க வைத்த பிதாவே!
உங்கள் பிரிவு ஆண்டைந்தாயினும்
மறக்க முடியுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

'ஆனந்தவாசம்',
மஞ்சத்தடி தெற்கு. இணுவில்.

(32825)(42-34-11-16)

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் வைகாசி மாதம் 27ஆம் நாள் (09-06-2004) புதன்கிழமை பகல் 10.37 மணிமுதல் 11.48 மணிவரையுள்ள சதய நட்சத்திரமும் சிங்கலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப்வேளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**லோகேஸ்வரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருவளர் செல்வி
**உதயச்செல்வி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர், சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்லவரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி சுப்பிரமணியம்
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.
T.P:0776184633.

நிரந்தர முகவரி:
சிறுவிளான்,
இளவாலை.

(32776) (26-11-16-34)

# உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வீட்டுத்தோட்டச் செய்கை கைகொடுக்கும்

**கடந்த முதலாம் திகதி இதே பகுதியில் வெளியான 'உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வீட்டுத்தோட்டச் செய்கை கைகொடுக்கும்' என்னும் பகுதியின் அடுத்த பகுதி இன்று வெளியாகின்றது.**

வீட்டுமுற்றங்களிலும், வீட்டில் காணப்படும் குறுகிய நிலங்களிலும் அலங்காரத்துக்கென நம்மவர்களில் பலர் பூ மரங்கள், குறோட்டன் வகைகள், நாகதாளி போன்ற முட்செடிகளையும் வளர்க்கின்றார்கள். நிலம் போதியளவு இல்லாதவிடத்து பூச்சாடிகளில் இவற்றை வளர்க்கின்றார்கள். இவை எமது கண்களுக்கு அழகையும் மனத்துக்கு மகிழ்ச்சியையும் தருகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால், நாம் சில பயிர் வகைகளை இவ்வாறு வளர்ப்பதன் மூலம் அழகையும், கவர்ச்சியையும் மகிழ்வையும் பெறுவதுடன் எமது நாளாந்தத் தேவைக்குரிய போஷாக்கான உணவுகளைப் பெறவும் எமது வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்துக்கொள்ளவும் முடியும்.

பூச்சாடிகளில் பூமரங்களை வைத்து வளர்த்து அழகு காண்பது போல மரக்கறிகள் (உதாரணமாகத் தக்காளி, வெண்டி, மிளகாய் போன்றன) வளர்த்து அவை பூத்துக்காய்க்கின்றபோது அவற்றின் அழகையும் அலங்காரத்தையும் காணமுடியுமல்லவா? அவற்றின் பயனையும் பெற முடியுமல்லவா?

### கொள்கலன்களில் நாற்றுகள்

வீட்டுத்தோட்டத்தில் அல்லது கொள்கலன்களில் நடுகை செய்வதற்குக் குறைந்தளவு நாற்றுக்கள் போதுமானவையாகும். பொலித்தீன் உறைகள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், உடைந்த பானைகள், தகரப்பேணிகள், சிரட்டைகள் போன்றவற்றில் நாற்றுக்களை உற்பத்திசெய்யலாம். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட ஏதாவது ஒன்றில் நீர்நிலைத்து நிற்காதவாறு அவற்றின் அடிப்பாகத்தில் துளைகள் இடப்படவேண்டும். நன்கு தூளாக்கிய மேல்மண்ணையும், சாணம் அல்லது கூட்டெரு போன்ற உலர்ந்த சேதனப் பசளைகளையும் சம அளவில் கலந்து அவற்றுள் இடவேண்டும்.

அவற்றுள் விதைகளை நடுவதற்கு முன் 2 அல்லது 3 மணிநேரம் அவற்றை நீரில் ஊறவிடுவது நல்லது. விதைகள் விரைவாக முளைகட்ட அது உதவியாக இருக்கும். விதைகள் நடப்பட்டு, அவை முளைக்கும்வரை அவற்றுக்குத் தேவையான அளவு வெப்பத்தையும், ஈரப்பதனையும் வழங்கவேண்டும். நாற்றுக்கள் வளர்ந்தபின் ஆரோக்கியமானவற்றைத் தோட்டத்தில் நடலாம்.

### மண்ணைப் பண்படுத்தல்

களைகளை அகற்றிய பின் 20-30ச.மீ. ஆழத்துக்கு மண்ணைக் கொத்திப்புரட்டி சுத்தமாக்கிக் குழிகளைத் தயார்படுத்தவேண்டும். நீர்ரோட்டத்துக்கு ஏற்றமாதிரிப் பாத்திகளைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். உகந்த இடைவெளிகளில் பயற்றை, போஞ்சி, பாகல், கெக்கரி, பூசனி, வெண்டி, தக்காளி, மிளகாய் போன்ற பயிர்களை நடலாம்.

நில இடவசதி இல்லாதவிடத்து பூச்சாடிகள், பிளாஸ்ரிக் வாளிகள், பொலித்தீன் பைகள் என்பவற்றைப் பயன்படுத்தலாம். ஆனால், நீர்தேங்காது அவற்றின் அடிப்புறத்தில் துளைகள் இட்டுக்கொள்ளவேண்டும்.

முளைக்கவைத்த நாற்றுக்களை நடுவதன் மூலம் திருப்திகரமான பலனை விரைவாகப் பெறலாம். விதைகளை அல்லது நாற்றுக்களை நடுவதற்கு மாலை நேரமே உகந்தது. நட்டபின் சிலமணிநேரத்துக்கு சூரிய வெப்பம் படுவதை இதுபோக்கும். நடப்பட்ட கன்றுகளின் அடிநிலத்தில் புற்கள், இலைகள், வைக்கோல் போன்றவற்றை இடுவதன்மூலம் காப்புச்செய்யலாம். இதன்மூலம் நீண்டகாலத்துக்கு நிலத்தின் ஈரப்பதனும் பேணப்படும். நீர்ப்பாசன நீரின் அளவும் குறையும். ஆனால், இப்பொருள்களில் இருந்து வேர்கள் விதைகள் மூலம் களைகளாக அவை வளர்ந்துவிடாது பார்த்துக்கொள்ளவேண்டும்.

## கமமும் புலமும்

தயாரிப்பு : ஜெயஸ்ரீ

### நோய்களும் கட்டுப்படுத்தலும்

வீட்டுத்தோட்டங்களில், கொள்கலன்களில் வளர்க்கப்படும் பயிர்வகைகளைப் பீடைகளும், பூச்சிகளும் தாக்குகின்றன. முக்கியமாக நத்தைகள், மயிர்க்கொட்டிப்புழுக்கள், தெள்ளு, இலையரிபூச்சிகள், வண்டுகள், அழுக்கணவன், எறும்புகள் போன்ற பலவற்றின் தாக்கம் காணப்படலாம்.

இவற்றின் தாக்கத்தைத் தினந்தோறும் அவதானித்து நத்தைகள், மயிர்கொட்டிகள் போன்ற புழுக்களைக் கைகளாலேயே பிடித்து நசுக்கி அழித்துவிடலாம். மண்ணின் மேற்பரப்பைக் காயவிடுவதன் மூலம் ஓரளவு கட்டுப்படுத்தலாம். இவற்றின் தாக்கம் அதிகமாகிவிட்டால் அப்பயிர்களை அழித்துவிடவேண்டும். அவற்றின் மண்தொற்று நீக்கப்படவேண்டும். சிலவேளைகளில் மரங்களின் பாதிப்புக்கு - பிரச்சினைக்கு - உரிய காரணங்கள் அறியப்படாமல் இருக்கலாம். இலைகள் பழுப்படைந்து மஞ்சள் நிறத் தோற்றமடைந்தால் போஷணைச் சத்துக்குறைவால் ஏற்பட்டதெனக் கருதலாம். அதிக நீர் ஊற்றுவதாலோ வேறு காரணிகளாலோ பயிர்கள் பாதிப்படையலாம். இலைகளில் புள்ளிகள் தோன்றக்கூடும் இவை பூச்சிகள் அரிப்பதாலோ அல்லது பங்கசு, பக்ரீரியாக்களாலோ ஏற்பட்டிருக்கலாம். சிலவேளைகளில் வேர்கள் அழுகலாம். செடிகள் வாடி வதங்கலாம். இவையெல்லாம் பயிர்கள் நோய்க்காளாகி உள்ளன என்றே கருதப்படும்.

### கிருமிநாசினிகளை நாமே தயாரிப்போம்

வீட்டில் கிடைக்கக்கூடிய சில பொருள்களை ஒன்று சேர்த்து, இந் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய கிருமிநாசினிகளை நாமே தயாரித்துக் கொள்ளலாம்.

சலவைச் சவர்க்காரம், மண்ணெண்ணெய் கொண்டு தயாரிக்கப்படும் கலவை, மரச்சாம்பல் கலந்த நீர், புகையிலைக் கலவை போன்ற சில கிருமிநாசினிகளை நாமே இலகுவில் தயாரித்துக் கொள்ளலாம்.

மரம் எரிந்த சாம்பலை நீரில் கரைத்து, பயிர்களில் தெளிப்பதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

**எராளன்**

புகையிலை, வெங்காயம், தக்காளி இலை, காரமான மிளகாய் என்பவற்றை அரைத்துச் சாறு எடுத்துச் சுத்தமான நீரில் ஒன்றுக்கு ஒன்று என்ற அளவில் கலந்து விசிறி நோய்களைக் குறைக்கலாம்.

சலவை சவர்க்காரக் கரைசல் கால்கோப்பை, மண்ணெண்ணெய் அரை மேசைக்கரண்டி, ஒரு லீற்றர் நீர் என்பவற்றைக் கலந்தும் தெளிக்கலாம்.

புகையிலை, சுருட்டு, சிகரட் என்பவற்றின் தூளை இரண்டு கோப்பை நீரில் கரைத்து 15 நிமிடம்வரை கொதிக்கவைத்து பின் அதனை வடிகட்டி எடுத்து, எட்டு மேசைக்கரண்டி எண்ணெய், இரண்டு மேசைக்கரண்டி வினாகிரி, இரண்டு முட்டை என்பவற்றையும் கலக்கி ஒன்று சேர்த்துச் சிறிதளவு சலவைச் சவர்க்காரத்தையும் கலந்தும் விசிறலாம்.

இவ்வாறு வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் சிறந்த நறுமணமுள்ள, சுவையான பொருள்களை நாம் பெற்றுப் பயனடையலாம். ★



சுன்னாகம் தெற்கு கண்ணகி குடியிருப்பில் உள்ள முன்பள்ளியின் திறப்புவிழாவில் சமூக சேவையாளர் து.சிவராஜா நாடா வெட்டி முன்பள்ளியைத் திறந்து வைக்கிறார். அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோர் காணப்படுகின்றனர். *(படம்: கோண்டாவில் செய்தியாளர்)*

# அதிவேகப் பாதை அமைப்பதில் ஆயிரம் கோடி ரூபாவை சுருட்ட முயற்சி!

## முன்னைய அரசுமீது ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்8

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப்பாதை அமைக்கும் திட்டத்தில் முன்னைய ஐ.தே.முன்னணி அரசு ஆயிரம் கோடி ரூபா மோசடியில் ஈடுபட்டது என ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேகப்பாதை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கொரியாவைச் சேர்ந்த 'கேகனம்' என்ற நிறுவனம் இந் தத் திட்டத்தைப் பொறுப்பேற்று வீதி செப்பனிடும் வேலையை ஆரம்பித்தது. இந்த வேலைத்திட்டத்தில் 35 வீதமானவை முடிவுற்ற நிலையில், கடந்த அரசினால் அந்த வேலைத்திட்டம் இடைநிறுத் தப்பட்டது. பின்னர் வேறொரு நிறுவனமொன்றுக்கு 2ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஒப்பந்த முறையில் அதை வழங்க முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

இதனால், சுமார் ஆயிரம் கோடி ரூபாவை மோசடிசெய்யும் கைங்கரியத்தில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. ஏற்கனவே ஒப்பந்தம் பெற்றிருந்த நிறுவனத்தைவிட சுமார் ஆயிரம் கோடி ரூபா அதிகமான தொகைக்கு வேறு ஒப்பந்த அடிப்படையில் அதை மாற்று நிறுவனமொன்றுக்குக் கொடுக்க முயன்றமை பற்றி சரியான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்றுபேரைக் கொண்ட விசாரணைக்குழு தற்போது வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்திருக்கிறது - என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பொலீஸ் தலைமைக்குள் இரகசிய இடம்மாற்றங்கள்

கொழும்பு,ஜூன்8

தேசியப் பொலீஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்றி சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் பலர் பொலீஸ் தலைமையகத்தினால் இரகசியமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். என்று தெரியவந்திருக்கிறது.

இந்த இரகசியத் திட்டத்தின் முதற்கட்டமாக பொலீஸ் பிரிவுகளை நிர்வகிக்கும் நிர்வாகப் பிரிவின் பிரதிப் பொலீஸ்மா அதிபர் காமினி சில்வா பொலீஸ் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு விக்ரர் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இது போன்றே, பொலீஸ் ஆணைக்குழுவுக்கு அறிவிக்காது, மேலும் பல பொலீஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று - தெரியவந்துள்ளது.

இதேவேளை, இவ்வாறு மேல் மாகாணத்தில் கடமையாற்றும் பொலீஸ் பிரிவுகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் உதவி அதிகாரிகளும் கொழும்பு மத்தி, களனி, நீர்கொழும்புப் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக உள்ள சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் ஆணைக்குழுவின் அனுமதி பெறாது, அரசியல் தலையீட்டின் மூலம் இவ்வாறு பொலீஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவது, பாரதூரமான குற்றமாகும் என பொலீஸ திணைக்களத்தின் உயர் மட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (4)



காரைநகர் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மரநடுகை நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலராகக் கடமையாற்றிய வே.சாம்பசிவம் மரக்கன்று ஒன்றை நடுகை செய்வதைப் படத்தில் காணலாம். அருகில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர்.

### கூட்டங்கள்

வலிகாமம் தெற்கு,ஜூன்8

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் என்பன இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளன.

பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் இன்று காலை 10.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இக்கூட்டங்கள் நடைபெறும். (4-152)

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு நீங்கலாக**

# 53ஆயிரம் பட்டதாரிகள் வேலைகோரி விண்ணப்பம்

## 12ஆயிரம் வெற்றிடங்களே உள்ளனவாம்

கொழும்பு,ஜூன்8

அரச துறைகளில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு வேலையற்றிருக்கும் பட்டதாரிகளை நியமிப்பதென்ற புதிய அரசின் திட்டத்துக்கமைய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் தவிர்நத நாட்டின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 52 ஆயிரத்து 989 பட்டதாரிகள் இதுவரையில் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இவற்றில் கடந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது பட்டங்களைப் பெற்றிராத -

இம்மாதம் 30ஆம் திகதியன்று 45 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுமெனவும்,

தற்போது அரச துறைகளிலோ அன்றி தனியார் துறைகளிலோ நிரந்தரப் பதவி வகிக்கும் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் இப்போதைக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாதெனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை -

பலதரப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் ஆகியவற்றில் மொத்தமாக 12 ஆயிரம் வரையிலான பதவி வெற்றிடங்களே நிலவுவதாகவும் நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

மேற்படி விண்ணப்பதாரிகளில் தகுதியுடையோருக்கான நேர்முகப் பரீட்சைகள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களினால் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அம்முடிவுகளுக்கமைய வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 | | 10 |
| ௴ | | ௴ |
| 11 | | 04 |
| ௴ | | ௴ |
| 1920 | | 2004 |



## Dr.கனகசபை கதிர்காமத்தம்பி

நாளை (09.06.2004) புதன்கிழமை காலை 5.00 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் நடைபெறும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தயவாக வேண்டுகின்றோம்.

'தவவாசா' - குடும்பத்தினர்.
கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (C-35417)(40-21-11-19)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் சுப்பிரமணியம் சதீஸ்குமார்

மண்ணில்: 04.04.1970 விண்ணில்: 13.05.2001

திதி: 08.06.2004 ஷஷ்டி

அந்நியம் சென்று அயராதுழைத்து
அவசரமாய் எமைவிட்டு சென்றதெங்கே?
ஆண்டுதான் மூன்றிங்கு சென்றாலும்
ஆறவில்லை எம் நெஞ்சிங்கே
இன் சொல் பேசிய இன்முகம் காணாது
இதயம்தான் இரும்பாகக் கனக்குதிங்கே?
உயிராய் உனை நாம் நினைத்திருக்க
உருமறைந்து நீ சென்றதெங்கே?

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா வி.சுப்பிரமணியம்
அம்மா சு.சித்திரா
தங்கைமார்: த.சதீஸ்வரி, ஈ.சதீஸ்கலா (சுவிஸ்), சு.சதீஸ்குமாரி,
தம்பி: சு.சதீஸ்வரன் (பேராதனைப் பல்கலைக்கழகம்)
அத்தான்மார்: ஆ.தங்கராசா, இ.ஈஸ்வரன் (சுவிஸ்)
மருமக்கள்: த.சபிதா, ச.சதீஸ்குமார்

வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு,
கரணவாய்.

(32551)(40-21-11-19)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 15 | | 21 |
| 03 | | 05 |
| 1985 | | 2003 |



## செல்வன் செல்லத்துரை பரணீதரன்

திதி.08.06.2004 ஷஷ்டி

உதட்டோரப் புன்னகை, கபடமில்லா உன்விகடப் பேச்சுக்கள்
அத்தனையும் எம் காதில் ஒலிக்குதடா செல்வா!
தினம், தினம் காலை எழுந்தவுடன்
உன் நினைவு எம்மை - துயரத்தில் ஆழ்த்துதடா மகனே!
எம் அருகில் நீ வந்து நாலு வார்த்தை பகிர்ந்திடடா.
கல்வியிலே கரை காண்பாய், விளையாட்டிலே வீரனாய்
என்றிருந்த நினைவுகள்- யாவும் பொய்யாச்சே பரணீதரா!
பொழுது சாயும் வேளையிலே மைதானத்தில் கரபந்தாடினாய்
பொழுது விடியும் வேளையிலே விண்ணுலகில் சங்கமித்தாயே?
மீண்டும் பிறப்புண்டேல், நாம் ஒன்றாய் இணையும் வரை
உன் ஆத்மா வாய்க்காற் தரவை விநாயகன் பாதத்தில்
துயிலட்டும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (08-06-2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது மகனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு, - குடும்பத்தினர்.
நீர்வேலி. (32766)(21-19-11)

**கொள்கை அளவில் கோரிக்கை ஏற்பு**

# விளையாட்டு விஞ்ஞான மாணவர் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள் இன்று தொடக்கம் நடத்தப்படவிருந்ததாக அறிவித்திருந்த போராட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

விளையாட்டு விஞ்ஞான அலகினை மூன்று வருடக்கற்கை நெறியாக நீடிக்குமாறு தாங்கள் விடுத்த கோரிக்கையினை துணைவேந்தர் கொள்ளை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று தமது கற்கைநெறி அலகுக்கான இணைப்பாளர் தம்மிடம் தெரிவித்திருக்கிறார் எனவும் இதனையடுத்தே தமது அஹிம்சை வழிப்போராட்டங்களைத் தற்காலிகமாக இடை நிறுத்தியிருப்பதாகவும் விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (4)

## விசுவமடுவில் சிரமதானம்

விசுவமடு,ஜூன்8

சுற்றுச்சூழல் தினத்தையொட்டி விசுவமடு விவசாயிகள் பல நோக்குக கூட்டுறவு சங்கமும் விசுவமடு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து விசுவமடு மாவீரர் மண்டபத்தினை சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளன.

இதேவேளை -

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உழவனூர் தம்பிராசபுர அ.த.க. பாடசாலையினை பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளனர். அத்துடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன மரங்களும் இந்த கிராம சூழலில் நடுவதற்கு ஏற்பாடாகியுள்ளதாக கிராமசேவையாளர் கோ.சேகர் தெரிவித்தார்.

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

அப்புத்தளை,ஜூன்8

பதுளையிலிருந்து நுவரெலியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த சொகுசு வான் ஒன்று அப்புத்தளை பொக்கேல்ல என்னுமிடத்தில் பாதையை விட்டுவிலகி விபத்துக்குள்ளானதால் 23 வயதுடைய இளைஞரொருவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் மாலை இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் காயமடைந்த வாகன சாரதி உள்ளிட்ட ஆறுபேர் தியத்தலாவை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வாகனத்தில் பயணஞ் செய்தவர்கள் அப்புத்தளை தங்கமலையிலுள்ள எடிசம் பங்களாவை பார்வையிட்ட பின்னர் ஹக்கல தாவரப்பூங்காவை பார்வையிடச் சென்றபோதே இவ் விபத்தில் சிக்கினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## மட்டக்களப்பில் தனியார் பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம்

மட்டக்களப்பு,ஜூன்8

தேநீர்க் கடை ஒன்றில் இடம்பெற்ற மோதலை அடுத்து, மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை தனியார் பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால், போக்குவரத்து ஸ்தம்பிதம அடைந்தது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நகரிலுள்ள தேநீர்க் கடை ஒன்றுக்கு உணவருந்த வந்த தனியார் பஸ் சாரதி, நடத்துநர்கள் சிலருக்கும் தேநீர்க்கடை உரிமையாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இருசாராருக்கும் இடையிலான கைகலப்பாக மாறியது.

தேநீர்க் கடை உரிமையாளர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அடுத்தநாளும் மோதல் நீடித்தது. இந்த மோதலின்போது தேநீர்க் கடை உரிமையாளரின் இரண்டு கடைகள் முற்றாகச் சேமதாகின என்று தெரிவிக்கப்பட்டது. தனியார் பஸ் சங்கத் தலைவரும் தாக்கப்பட்டிருந்தார்.

இரு தரப்பிலும் மோதலில் ஈடுபட்டவர்கள் என்று நம்பப்படும் 41 பேர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜா செய்யப்பட்டனர். இவர்களை இம்மாதம் 11ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவங்களை அடுத்தே ஞாயிற்றுக்கிழமை தனியார் பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். (8)

## சிற்றூர்திச் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

பொதுமக்களின் நன்மை கருதி 764 தட இலக்கம் கொண்ட சிற்றூர்திச் சேவை கடந்த முதலாம் திகதியிலிருந்து மயிலங்காடு ஊடாகத் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில்வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண சிற்றூர்திச் சங்கம் அறிவித்துள்ளது. (ஓ)

**ஜூலை 1இற்கு முன் கட்டண உயர்வு இல்லையேல்**

# தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலைப் பகிஷ்கரிப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜூன்8

தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிக்காவிட்டால் ஜூலை முதலாம் திகதி முதல் நாடுதழுவிய ரீதியில் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அரசை எச்சரித்துள்ளது.

எனினும், நினைத்தபடி எவராலும் பஸ் கட்டணத்தை உயர்த்திவிட முடியாது. அது தேசிய நலன்களுடன் சம்பந்தபட்ட விடயம். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவ்விடயம் தேசிய கொள்கைக்கு உரிய விடயமாக அமைச்சரவையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது எனத் தேசியப் போக்குவரத்து ஆணையாளர் கலாநிதி அமால் குமாரகே தெரிவித்தார்.

"எரிபொருள், பஸ்களுக்கு உரிய உதிரிப்பாகங்கள், டயர், டியூப், போன்றவை வழமையைவிட விலை அதிகரித்துள்ளதால் பஸ் கட்டணத்தை எட்டு சதவீதத்தால் அதிகரிப்பதைத் தவிர வேறுவழி தமக்குத் தென்படவில்லை எனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்தின தெரிவித்தார்.

ஆனால் தனியார் பஸ் உரிமையாளர்கள் நட்டமடைகின்றனர் எனக் கூறுவது அபத்தமானது. அளவுக்கு அதிகமான ஆளகளை ஏற்றிப் போக்குவரத்துச்சபை பஸ்களைவிட லாபம் ஈட்டுகிறார்கள். தனியார் பஸ் உரிமையாளர்களின் பஸ்களால் ஏற்படும் அஷௌகரியங்கள் பற்றியும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. தனியார் பஸ் உரிமையாளர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளமுடியாதது எனத் தேசியப் போக்குவரத்து ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# எம் விழிநீர் அஞ்சலி
# 31 ஆம் நாள் நினைவலைகள்





| அமரர் | செல்வி |
|---|---|
| கணபதி சிவனடியான் | சிவனடியான் கிருபாலினி |

05-08-1947 ← மண்மகிழ → 18-09-1983
09-05-2004 ← மனம்நெகிழ → 05-03-2001

தெய்வ அருட்கொடையோன் திறந்த மனம் கொண்டோன்
மெய்வருந்தி மேன்மைபெற்ற வள்ளல் பெருமகனாம்
உய்யவழி சிவவழிபாடுடனே சிந்தித்துத் தெளிந்தோன்
ஐயன் சிவனடியே சென்றடைந்து திங்களொன்றாகியதோ!

கிள்ளை மொழிபேசும் கிருபா அருகினிலே
மெலல் விரைந்து சென்ற வேதனையை அறியோமே!
எய்திடவே வேண்டும் சாந்தி ஐயப்பன் பாதமதில்
வையகத்தில் எம்விழிநீர் இவர் தமக்கே காணிக்கை!!

பிரிவால் துயருறும்:
*தேவமாதா கோயிலடி,* - குடும்பத்தினர்.
*ஊர்காவற்றுறை.* (32806)(34-21-11-19)

# தசாக கிருகயக்கு அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் தாரண வருடம் வைகாசி மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப விளக்கு சின்னத்தாய் பிள்ளையார் கோயில் பிரதம குரு

## பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் வேதக்குட்டிக் குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

| | | |
|---|---|---|
| 09.06.2004 புதன் | தசாகம் (கல்லெடுப்பு) | காலை 09.00 மணி |
| 10.06.2004 வியாழன் | ஏகோதிஷ்டம் (மாசிகம்) | பகல் 12.00 மணி |
| 11.06.2004 வெள்ளி | சபிண்டீகரணம் | பகல் 12.00 மணி |
| 12.06.2004 சனி | கிருகயக்ஞம் (சமாராதனை) | நண்பகல் 12.00 மணி |

இவ்வைபவங்களில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சின்னத்தாய் பிள்ளையார் கோயில், பிள்ளைகள்,
புலோலி தெற்கு, பேரப்பிள்ளைகள்,
புலோலி. (32780)(11-40-19) பெறாமக்கள்.

# அழிவுக்கு வித்திடும் பிளாஸ்ரிக்: ஓர் அழிக்க முடியாத ஆக்கம்

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதி இம் மாதத்தை சூழல் விழிப்புணர்வு மாதமாகப் பிரகடனம் செய்துள்ளது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

பற்துாரிகை பறபசை அடைப்பான், சவர்க்கார டப்பா, சட்டைப் பொத்தான், சீப்பு, செருப்பு, விளையாட்டுப் பொருளகள் என்று விரல் விட்டு எணணக்கூடிய உபயோகத்தில் இருந்த் பிளாஸ்ரிக் (Plastic) இப்போது நமது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் ஒட்டி உறவாடும் ஒரு பொருளாக மாறியுள்ளது. எங்கு திரும்பினாலும் விதம் விதமான வண்ணங்களில், வடிவங்களில், தன்மைகளில் பிளாஸ்ரீக்கின் ஆட்சியே நடந்து கொண்டு இருக்கிறது.

'பில்லியர்ட்' பந்துகள் செய்வதற்கான தந்தங்களைப் பெறுவதற்குத் தினமும் நூற்றுக்கணக்கான யானைகள் கொல்லப்பட, வேறொன்றைக் கண்டறியும் முயறசியில் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் வெஸ்லி ஹயற்(John Wesly Hyatt) 1869 இல் செலுலோயிட்டைக் கண்டுபிடித்தார். 1907இல் லியோ ஹெனட்றிக் பேக்லான் (Leo Hendric Bakeland) 'பேக்லைற்' எனப்படும் இன்னும் ஒரு வகையான பிளாஸ்ரிக்கை உருவாக்கினார். இருந்தபோதும், 1933 இல் ஃபேசெற், கிப்சன் (Fawcett & Gibson) என்னும் இரண்டு வேதியியலாளர்கள் வேதிப் பொருள்கனை உயர் அழுத்தத்துக்கு ஆழாக்கிப் பார்க்கையில் தற்செயலாகப் பிரசவித்த பொலித்தீன்தான் பிளாஸ்ரிக்கின் முகவரியை உலகுக்குத் தெரியப் படுத்தியது.

பிளாஸ்ரீக் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்கள் எளிதில் கிடைக்கக் கூடியவை தாவரப் பெறுதிகளான 'ரெசின்'களில் இருந்தும் பெற்றோலியப் பொருள்களில் இருந்துமே பெரும்பாலான பிளாஸ்ரீக் வகைகள் தயாரிக்கப்படுகின்றன. பிளாஸ்ரீக் இலேசானது, தண்ணீரில் கரையாது, துருப்பிடிக்காது, எல்லாவற்றுக்கும் மேலாக மக்கிப்போகாது. இந்தச் சிறப்புத் தகைமைகளுடன் அன்று பந்தயத்தில் ஓடத்தொடங்கிய பிளாஸ்ரீக், உலோகங்கள், மரப் பொருள்கள் என்று பாவனையிலிருந்த எல்லாவற்றையும் ஓரம் கட்டி விட்டு இப்போது முழு உலகையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது.

மண்ணோடு மண்ணாக மக்கிப் போகாத தன்மைதான் பிளாஸ்ரிக்குக்குத் தனியானதோர் அந்தஸ்தை தேடிக்கொடுத்தது. ஆனால், அதே ஸ்திரத் தன்மைதான் சுற்றுச் சூழலின் பிரதான எதிரிகளில் ஒன்றாகவும் பிளாஸ்ரிக்கை ஆக்கிவிட்டிருக்கிறது.

மண்ணில் உள்ள பக்ரீறியாக்கள், பங்கசுக்கள் போன்ற நுண்ணுயிரிகளின் செயற்பாட்டினால் பொருள்கள் சிதைந்து அழிவதை விஞ்ஞானிகள் உயிர்மச் சிதைவு என்று பெயரிட்டிருக்கிறார்கள். வீட்டுக்கழிவுகள், பண்ணைக்கழிவுகள், மரப்பொருள்கள் எல்லாம் இப்படித்தான் மண்ணுடன் கரைந்து இன்றியமையாத இயற்கைச் சுழற்சியில் பங்கேற்கின்றன. உலோகப் பொருள்கள் கூட வேதி மாற்றங்களினால் துரு ஏறி காலப்போக்கில் அழிந்து போய் விடுகின்றன. ஆனால், பிளாஸ்ரிக் மட்டும் சாகாத வரத்தை மனிதனிடம் வாங்கி வைத்திருக்கிறது.

உக்கிச் சிதையாமல் மண்ணின் மேலும், கீழும் காலங்காலமாகக் கிடக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளால் பூமி அனுபவித்து வரும் ஏராளமான துயரங்களை சுற்றுச் சூழலியலாளர்களும் மருத்துவ விஞ்ஞானிகளும் படியலிட்டுள்ளார்கள். அவை வருமாறு:-

★ பிளாஸ்ரிக் கழிவுகள் மழை நீரை நிலத்தினுள் நுழைய அனுமதிப்பதே இல்லை. ஏற்கனவே காடழித்தல், பச்சைவீட்டு விளைவு போன்ற சீர்கேடுகளால் நாவரண்டு போயிருக்கும் பூமியின் மிச்சச் சொச்ச நிலத்தடி நீரையும் மேலும், மேலும் பற்றாக்குறையாக்குகிறது.

★ தண்ணீரை மட்டுமல்ல, மண்ணுககுள் காற்றுப் புகுவதற்குக் கூடத் தடை சொல்லிவிடுகிறது. காற்றில்லாத சூழல், மண்ணுக்குக் கீழே கண்ணுககுத் தெரியாமல் இயங்கிக் கொண்டிருக்கும் நுண்ணங்கிகளின் உலகத்தை வெகுவாகப் பாதிக்கிறது. இதனால், உயிர்மச் சிதைவு இன்றி பொருள்களின் சுழற்சி தடைப்பட்டுப் போய்விடுகிறது. இது தாவரங்களின் வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கிறது.

★ பிளாஸ்ரிக் கழிவுகள் விதைகளை மூடி, அவற்றை முளை கொள்ள விடாமல் அவஸ்தைக்கு ஆளாக்கி வருகின்றன. தரைக்குக் கீழே புதையுண்டு கிடக்கும் பிளாஸ்ரிக், மண்ணின் பிடிமாணத்தை தளர்த்தி மலைப பகுதிகளில் அவ்வப்போது பெரும் மண்சரிவையும் உண்டு பணணுகிறது.

★ களை விதைகள் போலக் காற்றில் விரைவில் பரவும் இலேசான பொலித்தீன் பைகள் கழிவு நீர் கால்வாய்களில் வீழ்ந்து அடைப்பை ஏற்படுத்துகின்றன. இதனால், தேங்குகின்ற நீரில் நுளம்புகள் போன்ற நோய்க்காவிகள் பெருகுவதும் கழிவு நீர் தெருக்களில் பெருக்கெடுப்பதும் நிகழ்கிறது.

★ உணவுகளுடன் தூக்கி வீசப்படும் போசன விரிப்புகள் (Lunch sheets) பொலித்தீன் பைகளை உட்கொள்வதால் விலங்குகள் இறப்பதும சர்வசாதாரணமாகியுள்ளது. ராஜஸ்தானில் இறந்த ஒரு பசுவின் வயிற்றில் 40 கிலோ பிளாஸ்ரிக் பைகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ தரையில் மட்டுமல்லாமல், பிளாஸ்ரிக்கின் வல்லாட்சி கடலிலும் நீழுகிறது. மனிதன் பயன்படுத்திவிட்டு கடலில் வீசும் திடக் கழிவுகளில் பிளாஸ்ரிக்தான் முதலிடம் வகிக்கிறது. கடலின ஒவ்வெரு சதுரமைல் பரப்பளவிலும் சுமார் 46 ஆயிரம் பிளாஸ்ரிக் கழிவுகள் மிதப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவை டி.டீ.ரி போன்ற கிருமி நாசினிகளை ஈர்த்து நஞ்சாக மாறிவருகின்றன.



★ நஞ்சேறிய இந்த பிளாஸ்ரிக் கழிவுகளால் ஆண்டு தோறும் சுமார் ஒரு மில்லியன் கடற்பறவைகளும், ஒரு லட்சம் கடற்பாலூட்டி விலங்குகளும் எணணுக்கணக்கில்லாத மீன்களும் பலியாகி வருவதாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. பிளாஸ்ரிக் பைகளை ஜெலிமீன்கள் என நினைத்து விழுங் கும் ஆமைகள் உணவுச் குழல் உபா தைகளால் பெருமளவில் இறப்பதும் நிகழ்கிறது.

★ நீரில் அலையும் பிளாஸ்ரிக் பொருள்கள் பக்ரீறியா, பங்கஸ், அல்ஹாக்கள் போன்ற சிறிய உயிர்களை ஓரிடத்தில் இருந்து உலகின் இன்னோர் இடத்துக்கு காவிச் சென்று சேர்ப்பிப்பதால் புதிய பகுதியின் உயிரினச் சூழல் கடுமையாக பாதிக்கப்படுகின்றது.

★ உலகின் சிறு தீவுகளின் இருப்புக்கும் பிளாஸ்ரிக் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. 2003ஆம் ஆண்டில் இந்தியாவின் கடற்றொழில் நுட்ப தேசிய ஆய்வு மையம் அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் மேற்கொண்ட ஆய்வுகளில் இது நிரூபணமாகியுள்ளது. வங்கக் கடலில் பயணிக்கும் கப்பல்களில் இருந்தும் சூழவுள்ள நாடுகளில் இருந்தும் சேரும் பிளாஸரீக் கழிவுகள் இத்தீவுகளைச் சூழவுள்ள பவளப் பாறைகளை அடைந்து அவற்றை இறக்கச் செய்து வருகின்றன. இயற்கைப் பாதுகாப்பு அரண்களாக விளங்கும் பவளப் பாறைகளின் அழிவு அந்தமான் - நிக்கோபாா தீவுகளின் அழிவுக்கும் வழிகோலும் என அஞ்சப்படுகிறது.

★ சில வகையான பிளாஸ்ரிக் தாளினால் சிலவகை உணவுகளைப் பொதி செய்து நெடுநாள்கள் வைத்திருக்க நேரின் பிளாஸ்ரிக்கின் நச்சுக் கூறுகள் சிறிது சிறிதாக உணவைச் சென்றடைவது நிரூபணமாகியுள்ளது. பொலிஸ்ரைறின் பிளாஸ்ரிக்கிலிருந்து ஸ்ரைறீனும், பீ.வீ.சி எனப்படும் பொலிவினைல் குளோரைட்டு (Pvc-Poly Vinyl Choloride) பிளாஸ்ரீக்கிலிருந்து தாலேற்றுக்களும் (Phthalates) பால் உணவுப் பொருள்களுடன் கலக்கின்றன.

★ பீவி.சி பிளாஸ்ரிக்கை அதனை நெகிழ்த்துவதற்காக கட்மியம் ஈயம் போன்ற உலோகங்களும் தரம் சிதைவடைவதைத் தடுப்பதற்காக தாலேற்றுக்களும் சேர்க்கப்படுகின்றன. பீ.வி.சி பிளாஸ்ரிக்கிலான விளையாட்டுப் பொருள்களைக் குழந்தைகள் கையாளும்போது இந்தக் கூறுகள் வாய்மூலம் குழந்தையின் உடலைச் சென்றடைகின்றன.

★ தூய குடிதண்ணீர், சோடாப் பாணங்கள் அடைத்துவரும் 'பெற்' (Pet-Poly Ethylene Tetra Phthalate) போத்தல்களும் கூட பாதுகாபபானவை அல்ல. இவற்றிலிருந்து நீரினுள் அசற்றல் டிகைட்டு என்னும் வேதிப்பொருள் விடுவிக்கப்படுகிறது. இவ்வாறு பிளாஸ்ரிக்கின் விசத் தன்மை கொண்ட கூறுகள் உடலில் சேரும்போது தலைச்சுற்று, வாந்தி பேதி, குடற்புண், நரம்புத் தளர்ச்சி தொடங்கி ஆண்மை இழப்பு, புற்று நோய் வரையுமாய் ஏராளமான பாதிபபுகள் ஏற்படுகின்றன.

★ பிளாஸ்ரிக் கழிவுகளை எரித்து அகற்றுவது என்பதும் இலேசான ஒன்றல்ல. தனது இருப்பின்போது அச்சுறுத்தும் பிளாஸ்ரிக் இறப்பின் போது முன்னரைவிட அபாயகரமான அவதாரம் எடுக்கின்றது. பிளாஸ்ரிக் கழிவுகளை எரிப்பதால் 'டையொக்சின்' (Dioxin) என்ற நச்சு உருவாகி காற்றுடன் கலக்கிறது.

★ குளோரினை ஓர் உள்ளடக்கமாகக் கொண்ட பொருள்களை உருவாகும்போதும் அவற்றை எரிக்கும் போதும் விடுவிக்கப்படும் நூற்றுக்கும் மேலான நச்சுக் கூறுகளையே இப்படி டையொக்சின் என்று பொதுப்பெயர் கொண்டு அழைக்கிறார்கள்.

மனிதன் உருவாக்கிய நஞ்சுகளில் டையொக்சின் மிகவும் கொடூரமானது. கதிர்த் தொழிற்பாட்டுக் கழிவுகளுக்கு அடுத்தபடியாக இது ஒப்பிடப்படுகிறது இலகுவில் பிரிந்து அழியாத இந்த நச்சு வேதி - புகையைச் சுவாசிப்பதன் மூலமும், உணவுச் சங்கிலி மூலமும் உடலில் நுழைகிறது. கொழுப்பில் கரையக்கூடியதாகையால் அப்படியே உடல் இழையங்களில் தேங்கியும் விடுகின்றது.



ஏஜன்ற் ஓறேன்ஞ்சில் கலந்திருந்த டையொக்சின் நஞ்சால் ஏற்பட்டு வரும் பிறப்புக் குறைபாடு.

★ தமிழகத்தில் சென்னை மாநகராட்சி குப்பைகொட்டிவரும் பெருங்குடிப்பகுதியில் வாழும் பெண்களின் தாய்ப்பாலை ஜப்பானில் உள்ள எகிம் பல்கலைக்கழகத்தின் கடலியல் சுற்றுச் சூழல் மையம் ஆராய்ந்ததில் அதிர்ச்சி அளிக்கும் அளவில் தாய்ப்பாலில் டையொக்சின் இருப்பது தெரிய வந்துள்ளது.

★ டையொக்சின், நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து தொற்று நோய்களை வாங்குவதுடன் மூளை வளர்ச்சியையும் பாதித்து வருகிறது; டையொக்சின் பல்வேறு வகையான புற்று நோய்களையும் பிறப்புக் குறைபாடுகளையும ஏறபடுத்தக்கூடியது.

★ வியட்நாம் போரில் அமெரிக்கக் காடுகளில் விசிறிய ஏஜன்ற் ஒறேன்ஞ (agent orange) என்னும் நச்சுக் களைகொல்லியில் டையொக்சினும் கலந்திருந்தது. போர் முடிந்து இவ்வளவு வருடங்கள் கழிந்த பின்னரும் அங்கு பிறக்கும் குழந்தைகள் பிறப்புக் குறைபாடுகளைக் கொணடிருபபதற்கு டையொக்சின் தான் காரணம் என நம்பப்படுகிறது.

★ டையொக்சின் ஆண்களில் [illegible]றோஜன் (Estrogen) என்ற [illegible] ஓமோனைப் போலப் பாசாங்கு செய்து மலட்டுத்தன்மையையும் உண்டு பண்ணுகிறது. 50 ஆண்டுகளுக்கு முன் ஆண்கள் பிறப்பித்த விந்துகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இப்போது ஆண்களில் விந்துக்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் குறைவடைந்து இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. விந்துகள் இப்படி காணாமற்போனதற்கான காரணிகளில் மருத்துவ விஞ்ஞானிகள் டையொக்சினையே முதன்மைப்படுத்துகிறார்கள்.

சுற்றுச் சூழலியலாளர்கள் மேற கொண்டுவரும் பிளாஸ்ரிக்குக்கு எதிரான பிரசாரப் போரை உயிர்காக்கும் இரத்தம் சேகரிக்கும் பைகள் தொடங்கி துடுப்பாட்டக்காரர்களின் தலைகாக்கும் கவசம் வரை மனதைத் தொடும் உதாரணங்களாகக் காட்டி பிளாஸ்ரீக் உற்பத்தியாளர்கள் எதிர் கொண்டு வருகின்றனர். மனித வாழ்வியலில் வந்து ஒட்டிக்கொண்டு விட்ட பிளாஸ்ரிக்கின் பயன்பாட்டை மறுப்பதற்கு இல்லை. ஆனால், இதன உபயோகங்களை விட உபத்திரவங்கள் அதிகம் என்பதே பிளாஸ்ரிக் மீதான தடை பற்றியும் பிளாஸ்ரிக்குக்கான மாற்றீடு பற்றியும் உலகை மிகத் தீவிரமாக யோசிக்க வைத்திருக்கிறது.

ஒரு தடவை பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் பொருள்களுக்கான கட்டுப்பாடுகளும், தடைகளும் உலகின் பல நாடுகளில் சாத்தியமாகி அவ்விடத்தை மீண்டும் இயற்கை உற்பத்திகளான அழகிய கடதாசிப் பைகளும், அட்டைப் பெட்டிகளும் துணிப்பைகளும் மெல்ல ஈடுசெய்து வருகின்றன.

ஆனால், ஏனைய பிளாஸ்ரிக்குகளுக்கான வெற்றிகரமான மாற்றீடு இன்னமும் அறிவியலாளர்களின் சிந்தனையை எதிர்பார்த்து கண்டறியப்படாமலே உள்ளது. அதுவரையில், தேவையற்ற பிளாஸ்ரிக் பொருள்கள் வாங்குவதைத் தவிர்ப்பது, தேவைகளை இயன்றளவு குறைத்துக்கொள்வது, முடிந்தவரை நீண்டகாலம் திரும்பத் திரும்ப பயன்படுத்துவது, எறிவதற்கு முன்னால் இன்னொருமுறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து சுற்றுச் சூழலுக்கு பாதகம் இல்லாத முறையில் மீண்டும் பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மைதான் பிளாஸ்ரீக் அபாயத்தை எதிர் கொள்ள நம் முன்னால் உள்ள ஒரு கடைமையாக இருக்கும். ❐

# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்தின் சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன. எனவே, சந்தைகளில் பணிபுரிய விரும்புவோர் தன்வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004-06-09 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு வருகைதருமாறு வேண்டுகிறோம்.

பணிநிலை:

(01) காப்பாளர் (02) எழுதுநர்

(03) வரி அறவீட்டாளர்

தகைமைகள்:

01) தமிழ், கணிதம் உட்பட க.பொ.த. சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.

02) அகவை 18-35 வரை இருத்தல் வேண்டும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும்:

*நாள்:* 2004-06-09

*நேரம்:* காலை 10.00 மணி

*இடம்:* 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

★ *குறிப்பு:* நேர்முகத் தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதரல் வேண்டும்.

ஆளுகை,
சந்தைப்பகுதி,
யாழ்.மாவட்டம்.

(32792) (21-11-16-26)

# மேர்ச்சனட் பினான்ஸ் லிமிட்டெட்

## இல.555, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### வாகனங்களின் மூலப்பதிவுப் புத்தகங்கள் - மீளப்பெறல் - ஒரு வசதி

வாகனங்கள் இலக்கம் :-

| | | | |
|---|---|---|---|
| 41-3574 | 27-1939 | 26-8936 | 27-4673 |
| 42-3927 | 27-9771 | 28-1754 | 42-1182 |
| 41-9454 | 28-1168 | 41-9556 | 26-8419 |
| 26-5112 | 26-7299 | 27-9052 | 28-1862 |
| 26-4568 | 28-7261 | 26-8746 | 41-7041 |
| 28-6263 | 28-9697 | 41-6126 | 41-4129 |
| 42-0999 | 40-2295 | 43-9944 | 42-0761 |

வாடகைக் கொள்வனவு, தவணைமுறைக் கொள்வனவு, குத்தகை ஒப்பந்த அடிப்படையில் எம்மிடம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேற் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கங்களையுடைய வாகனங்களை வைத்திருப் பவர்கள், உரிமையாளர்கள் தத்தமது வாகன மூலப் பதிவுப் புத்தகத்தை எம்மிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள வசதியாக ஒப்பந்தத்தின்படி 31.10.1995 இல் செலுத்தவேண்டியுள்ள மிகுதியாக இருக்கும் முதல் வட்டித் தொகைகளை மட்டும் செலுத்தி தங்களது வாகனப் பதிவுப் புத்தகங்களை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும் பின்னர் ஏற்படக்கூடிய சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

அலுவலக நேரம்:

காலை 9.00 மணி - 1.00 மணிவரை
(கிழமை நாள்களில்)

முகாமைத்துவ இயக்குநர்.

(32823)(34-11-16-21)

# கொடிகாமம் பிரிவில் நாய்களுக்குத் தடுப்பூசி

கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பின்வரும இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளது.

அத்துடன், நாய்களுக்குரிய உரிமத தகடு, கழுத்துப்பட்டி என்பனவும் வழங் கப்படவுள்ளன. இதற்கான திகதிகள் பின்வருமாறு:

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு உசன் ஆரம்ப சுகாதார நிலையம், முற்பகல் 11.00 மணிக்கு மிருசுவில் தேவாலயம்.

17ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வெள்ளாம்போக்கட்டி நெசவு நிலை யம், முற்பகல் 11.00மணிக்கு அல்லாரை அ.த.க. பாடசாலை

18ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தவசிக்குளம் பாலர் பாட சாலை முன்றில், 11.00 மணிக்கு தவசி குளம் அம்மன் கோயில் முன்னால்

22ஆம் திகதி காலை 9.00மணிக்கு பாலாவி தெற்கு கிராம அலுவலர் அலுவலகம், 11.00மணிக்கு பாலாவி வடக்கு சனசமூக நிலையம்

24ஆம் திகதி கொடிகாமம் ஐயனா கோயிலடி, 11.00 மணிக்கு கொடி காமம் மாவீரர் மயானத்திற்கு முன்பாக.

29ஆம் திகதி காலை 9.00 மணிக்கு மிருசுவில் முருகா கடையடி, 11.00 மணிக்கு மிருசுவில் மன்னன் குறிச்சி கந்தசாமி கோயிலடி. இந்த நடவடிக கைக்குப் பின்னர் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படும் எனவும் - சாவ கச்சேரி பிரதேச சபையின் உரிமத்தகடு இல்லாத நாய்களை எவரும் உரிமை கோரமுடியாது எனவும் பிரதேச சுகாதார பிரிவினர் அறிவித்திருக்கின்றனர்.(4-117)

# ST. JOHN'S COLLEGE JAFFNA

## OLD BOYS' ASSOCIATION

The 89th Annual General Meeting of the old Boys' Association is Scheduled to be held on the 12th of June 2004 (Saturday) at 8.30 a.m. in the College Auditorium as announced earlier. We have great Pleasure in inviting all the old Boys' along with their Spouses.

**The Programme For the day**

7.00a.m. Holy Communion Service
8.00a.m. Fellowship Breakfast
8.30a.m. Annual General Meeting
1. Prayer
2. Vote of Condolence
3. Minutes of the Last AGM
4. Principal's Review
5. Annual Report
6. Statement of Accounts
7. Election of Office Bearers

9.30 a.m. Cricket Match - old Boys Vs Present Boys
1.30 p.m. Fellowship Lunch

Kindly accept this invitation as no individual notices would be sent. Breakfast (30/=) and lunch (100/=) tickets are available from the treasurer Mr. T.Nanthakumaran at the College.

S.Thanapalan, Principal. S.Pathamanathan, President. A.Navaneethakrishnan, Secretary.

(C/35474) (26-11-16-21)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 13 - 05 - 1927



இறைவன் அணைப்பில் 08 - 06 - 2003

திருமதி **ஆபிரகாம் எலிசபேத்**

(பூமணி - மல்லாகம்)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

ஆண்டு ஒன்று ஆனாலும் எம்துயரம் ஆறவில்லை
அன்புக்கும் பண்புக்கும் ஆதரவாய் இருந்தீர்கள்
விருட்சமாய் விழுது விட்டு வேராக இருந்தீர்கள்
நீங்கள் இல்லாத இல்லம் இங்கு தவிக்கின்றதே
உடம்பு மறைந்தாலும் உங்கள் நினைவு மறையாது.

*48/2, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.:222 2880* (38820)(42-11-16-21)

- அன்பு மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 12 - 1915



மறைவு 11 - 06 ⌝ 2001

அமரர் **பசுபதி சோமசுந்தரம்** (P.S)

திதி: 08-06-2004

வண்ணை வீரமாகாளி விரைகழல் நாம் துதித்து
விண்ணில் விளக்காய் விளங்கிடும் நின்னை - நினைந்து
மண்மிசை நாமிருந்து மனதிருத்தி நான்காண்டு
கண்ணில் நீர் மல்க கடிமலர் தூவி துதிக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(32822)(21-11-16)

# தமிழர் விடுதலை பெறாவிட்டால் சிங்களவர்களுக்கும் விமோசனமில்லை

## அரசியல் ஆய்வாளர் திருநாவுக்கரசு உரை

**பிரபல அரசியல் விமர்சகரும், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் அரசியல்துறை விரிவுரையாளருமான மு.திருநாவுக்கரசுவின் உரையின் இறுதிப்பகுதி இன்று வெளியாகிறது. கடந்த மாதம் 9ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சமகால அரசியல் நிலைமை தொடர்பான கருத்தரங்கில் அவர் உரையாற்றினார். அவ்வுரையின் 5ஆவது பகுதி கடந்த 4ஆம் திகதி வெளிவந்தது.**

6

சமாதானம் வேண்டும் என்றால் நாடாளுமன்றத்திற்குப் போகாதீர்கள். பத்திரிகைகள்தான் சமாதானத்தைத் தூண்டவேண்டுமே தவிர அரசியல்வாதிகள் அல்லர். இல்லையென்றால் சமாதானமே இல்லை.

சிறிய விடயமாக இருந்தால் கூட பத்திரிகைகளுக்கு எல்லாத் தகவல்களும் கிடைக்கும். எந்தப் பிரச்சினைக்கும் கொழும்பில் இருந்து வருகின்ற சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் தமிழின எதிர்ப்பைத்தான் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் உள்ள எந்தவோர் அரசியல்வாதியும், சிங்கள அரசியல்வாதியும் சமாதானத்துக்காக உண்ணாவிரதம் இருந்ததாக, ஆர்ப்பாட்டம் செய்ததாக வரலாறு இல்லை. சமாதானத்தைப் பற்றிப் பேசுபவர்களே ஒடுக்குமுறைகள் பற்றிப் பேசவேண்டும். அதற்காகப் போராடும் திராணியைக் கொண்டிருக்கவேண்டும்.

இந்தியாவில் பிரிட்டிஷ்காரர் வெட்டிக் குவித்தபோது காந்தி உண்ணாவிரதமிருந்தார். ஆனால், காந்தியின் பிழையான தீர்மானங்கள் இந்து முஸ்லிம் கலவரங்களுக்கும் காரணமாக இருந்தன. வெளிப்படையாகச் சொன்னால் காந்தி மக்களுக்காகப் போராடினார்.

சமாதானத்துக்கான மனப்பாங்கு இல்லாத இப்படி ஒரு சிங்களத் தலைமை இலங்கை வரலாற்றிலேயே இல்லை. எவ்வாறு சமாதானத்தைப் பெறமுடியும்.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகங்கள் வரை பத்திரிகைகள் வரை உள்ளாக சமாதானம் பேசவேண்டும். இல்லையேல் சமாதானம் இல்லை.

ஒரு சிலர் விடுக்கின்ற அறிக்கைகள், ஊர்வலங்கள், கறுப்புவெள்ளைக் கொடிப்போராட்டங்கள் எதுவும் செய்யப்போவதில்லை.

ஒரு மக்கள் திரளைக்கொண்டுவரக் கூடிய ஆற்றலுள்ள தலைவன் ஒரு ஜனரஞ்சகத் தலைவன் சமாதானத்துக்காக களத்தில் இறங்கினாலே தவிர அதற்காகத் தியாகம் செய்யத் தயாரானாலே தவிர சமாதானத்தைக் கொண்டுவர முடியாது.

### ரணில் பின் வாங்கினார்

இந்த முறை பொதுத் தேர்தலில் ரணில் சமாதானத்தைப் பற்றி அதிகம் கதைக்கவில்லை; பயப்பட்டார்; ஜே.வி.பியுடைய சிங்கள இனவாதத்துக்கு முன்னால் கடுமையாக அக்கறை கொள்ளவில்லை. தான் செய்ததெல்லாம் சரியென்று நியாயப்படுத்துவதற்கு அக்கறை செலுத்தவில்லை. தேர்தலில் பின் வாங்கினார்.

சந்திரிகா அவருடைய அமைச்சுக்களைப் பறித்தபோது ஐ.தே.க. போராட்டத்தில் குதித்திருக்கவேண்டும்; குதிக்கவில்லை. அதற்கு ஏதாவது அடிப்படையான பிரச்சினை இருந்திருக்கவேண்டும். கற்பனைகளில் இந்த விடயம் குறித்து எடைபோடமுடியாது. யதார்த்தங்களால் பார்க்கவேண்டும்.

யாப்பு அமைப்புத்தான் இப்பொழுது இலங்கைப் பிரச்சினைகளுக்குள் சிக்கலைத் தருகின்றது என்று சொல்லப்படுகின்றது.

### இலங்கையின் யாப்பு

இதில் தீர்மானங்கள் எடுக்க முடியாது உள்ளது என்று சொல்லப்படுகிறது. இலங்கையின் யாப்பு முறையானது உலகிலேயே மிகவும் கூழாம்பாணியானதும், விகாரமடைந்ததும், எல்லாப் பிழைகளும் இணைக்கப்பட்டதுமான யாப்பாகும். ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிரான யாப்பு இந்த யாப்பு.

**தொகுப்பு : கிருஷ்ணா**

சிங்கள அரசை ஒற்றைக்குதிரை ரேசாக ஓடவைக்கின்றது இந்த யாப்பு. சிங்கள அரசு முழுப்பலத்துடன் இருக்கும் கட்டங்களில் நாங்கள் இலகுவாக நசுங்கி விடுவோம். இப்பொழுது முடிப்பாரற்று நின்றிருந்தால் பேச்சு இறுதிக்கு போய் ரணிலுடன் பேச்சு முறிந்து யுத்தத்திற்கு முகம் கொடுத்திருப்போம்.

இந்த இழுபறிக்குள் அமெரிக்கா முடிவெடுக்க முடியாது போய்விட்டது. இப்பொழுது இந்தியாவும், அமெரிக்காவும் முடிவெடுக்கமுடியாது.

இப்பொழுது இலங்கை அரசுக்குள் இருக்கும் இழுபறிக்குள் நாங்கள் தாக்கம் செலுத்தக் கூடியவர்களாக உள்ளோம்.

முஸ்லிம் மக்களை அரசியல் ரீதியாகப் பார்க்காமல் ஒடுக்கப்படும் நிலையில் பார்க்கவேண்டும் இன விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலைதான் முஸ்லிம் கட்சி பலமடைய முடிந்தது. விகிதாசார பிரதிநிதித்துவ முறை இல்லை என்றால் முஸ்லிம்கள் உதிரி சக்திகளாக போயிருப்பார்கள். அல்லது ஓரிரு ஆசனங்களைப் பெறமுடியும். இன விகிதாசாரத்தின் கீழ் முஸ்லிம்கள் பலமடைந்துள்ளனர். இன விகிதாசார முறையின் கீழ் உள்ளதால் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டுக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு சாதகமானது. இல்லை என்றால் ஒரு குதிரையே ஓடிக்கொண்டிருக்கும்.

எனவே, ஒட்டுமொத்தமாக இலங்கை அரசியலில் ஒரு முக்கிய கட்டம் இது. ஆனபடியால் பழைய வருப்பு வெறுப்புகளுக்கூடாகவோ மனஸதாபங்களுக்கு ஊடாகவோ அன்றி ஒதுக்கப்பட்ட மக்களின் நிலையிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களின் நிலையிலிருந்து பார்க்கவேண்டும். ஒரு துல்லியமான சர்வதேச பார்வையினூடாக ஒரு துல்லியமான உள்நாட்டு அரசியல் போக்கின் ஊடாக பார்க்கலாம்.

இப்பொழுது உலக அரங்கை பயன்படுத்துவது சிங்கள அரசா, பேராட்ட சக்தியா? என்பதில் இரண்டு பேருக்கும் பங்குண்டு. எப்படிப் பயன்படுத்துவது, எவ்வளவு தூரம் பயன்படுத்துவது என்பது திறமையையும் பொறுத்தது. அரசு பயன்படுத்தும்போது எதிர்க்கட்சியும் பயன்படுத்தலாம் புலிகளும் பயன்படுத்தலாம் பயன்படுத்தாமலும் விடலாம். உள்நாட்டு சர்வதேச பலத்தை பேச்சைப் பொறுத்து தந்திரோபாய நிலையைப் பொறுத்து ஒருபக்கம் இழந்து செல்லக் கூடிய நிலை இருப்பது நல்லது.

இந்தச் சுற்று வட்டத்திற்குள்ளால் இலங்கை அரசியலில் விளங்கி வைத்திருக்கவேண்டிய தமிழ்மக்களின் நலன்களை எடைபோடவேண்டிய ஓர் அறிவார்ந்த நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிடம் போய் ஜஸ்வந் சிங்காவை ஆரத்தழுவி இலங்கைக்கு உதவுமாறு கேட்டிருந்தார். எனவே, இந்தியா இலங்கைக்கு உதவுமா? மூன்றாந் தரப்பாக வருமா என்ற கேள்விகள் எழுந்தன.

### இந்தியாவின் இடம் என்ன?

பேச்சின் தடம் போடப்பட்டுவிட்டது. நோர்வேயின் மேற்பார்வையின் கீழ் பேச்சு நிகழ்கின்றது. இதில் இந்தியாவின் இடம் என்ன? இந்தியாவின் பங்கு என்ன?

இந்துப் பேச்சில் இந்தியா, நோர்வே, அரசு, புலிகள் இருக்கவேண்டும். இந்தியா பேச்சுக்கு வருமாயின் எப்படிப் பேசலாம். புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும். நோர்வேயை பேச்சுக்கு அழைத்துவிட்டால் இந்தியாவை அணுகாது.

சந்திரிக்காவுக்கும் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் தெரியும் இந்தியா வரமாட்டாதென்று.

இந்தியாவைப் பற்றி விளங்கிக் கொள்ளமுடியாத அளவிற்கு தமிழர்கள் இல்லை. இவர்கள் மேசைக்கு வரமுடியாது. வந்தால் நோர்வே இருக்க முடியாது. அப்படியானால் புதிய கட்டத்திற்குச் செல்லவேண்டும். தென்ஆசியாவை உள்ளடக்கி இது இருக்கவேண்டும்.

மற்றது தாங்கள் இது வரைகாலமும் கதைத்து வந்ததற்கு மாறாக தங்களது முயற்சி செயற்பட முடியாது போய்தான் நோர்வேயைக் கொண்டு வந்தோம் என்று சிங்கள மக்களுக்கு விளக்கம் சொன்னார்கள்.

இப்பொழுது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கிவிட்டு இந்தியா பேச்சுக்கு வந்தால் ஏற்றுக் கொள்வோம். தடைநீக்காமல் விடுதலைப் புலிகளோடு இந்தியா பேச முடியாது.

அடுத்து இந்தப் புதிய கட்டம தேசிய இனங்களுக்கு ஒரு சாதகமான நிலையை வைத்துள்ளது. உலகின் வரலாற்றில் உரிமையின் பாதையில் வளர்ந்து கொண்டு போவதையே நாம் காண்கின்றோம். இலங்கையில் அது உறுதிபட்டுக் காணப்படுகிறது.

தமிழரசுக் கட்சி சமஷ்டி கட்சியாக மாறிவிட்டது. சமஷ்டிக் கட்சியின் கோரிக்கையில் நெகிழ்ச்சி ஏற்பட்டது

### சிங்கள மக்களின் தீர்வு என்ன?

பண்டா - செல்வா ஒப்பந்தத்திலே பல சலுகைகளுக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டது. டட்லி - செல்வா ஒப்பந்தம் மாவட்ட சபைக்குச் சென்றது. ஜே.ஆர். மாவட்ட அபிவிருத்தி சபை, என்றார்.

ஒரு செயல் நிகழ்ந்தால் அதன் வளர்ச்சிப் போக்காக மற்றது நிகழ்கின்றது. தமிழர் ஒடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தினால் அது நிகழ்கின்றது. எல்லா செயல்களிலுமே இந்த விதி நிகழ்கின்றது.

தமிழ்மக்கள் பற்றி சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டப்பட்டிருக்கின்ற கருத்தின் பிரகாரம் இறங்குநிலையில்தான் பிரச்சினைகள் உள்ளன.

மேற்குலகம் கண்டதுபோல இனப் பிரச்சினைக்கு வேறு நாடுகள் கண்டதுபோல பிரச்சினைகள் நெகிழ்ச்சியடைந்து கொண்டு போகவில்லை. அந்த நெகிழ்ச்சியின்மைதான் இவ்வளவு பிரச்சினைக்குக காரணம்.

சிங்கள மக்களைக் கேட்டால் அவர்கள் சமாதானம் என்பது யுத்தம் இல்லையே தவிர நீதி அல்ல. கடந்த தேர்தலில் அவர்கள் ஹெல உறுமயவிற்கு அளித்த வாக்கு, ஜே.வி.பிக்கு அளித்த வாக்கு, நகர்வுக்கு எதிரான வாக்கு சமாதானத் தீர்வுக்கெதிரான வாக்கு. எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கின்படி 51 வீத மக்கள் சமஷ்டித் தீர்வை எதிர்க்கிறார்கள்.



இத்தகைய யதார்த்தத்தின் பின்னணியில் நின்றுகொண்டுதான் இலங்கையின் அரசியல் பற்றி நாம் ஒரு புதிய மதிப்பீட்டுக்கு வரவேண்டியிருக்கின்றது.

விவகாரப்பட்ட பண்டா யுகம் எங்கே இலங்கைத்தீவைக் கொண்டு போய்விடும். எவ்வளவுக்கெவ்வளவு அவர்களுடைய ஒடுக்குமுறைகளும், விகாரங்களும் வளர்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தமிழ் மக்களின் பிரச்சினைகளும் போராட்டத்தின்பால் வளர்ந்துசென்றது.

எனவே, சிங்கள மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும் நாட்டை இந்த அளவிற்கு கொண்டு சென்றது பண்டாயுகம். ஐ.தே.கவின் கடந்தகால கொள்கைகளும், கடந்தகால இனவாதமும்தான் இவ்வாறு கொண்டு போயின.

### இனி அடுத்த கட்டம்

சிங்களமக்களிடமிருந்து நம்பிக்கைக்குரிய தலைமை தோன்றுமா? இல்லை நம்பிக்கையின்மையான தலைமை ஒன்றே தோன்றுகின்றது. அது ஜே.வி.பி. எனவே, இதை வேதனையுடன் பார்க்கலாம்.

எனவே, தமிழ் மக்களின் எதிர்காலம் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையே தவிர அதை நோக்கிய வளர்ச்சிப்பாதையே தவிர வேறில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைதான் இலங்கையின் அனைத்துப் பிற்போக்கான நிலைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழர்களின் பேரால் சகல அடக்குமுறைகளும் இடம்பெற்று அது காலத்துக்கு காலம் இலங்கையின் எல்லாப் பிற்போக்குக்கும், எல்லாத் தீர்வுகளுக்கும் பயன்பட்டது. தமிழ் மக்கள் விடுதலை பெறாவிடில் இலங்கைத் தீவிற்கு விமோசனமில்லை. சிங்கள மக்களுக்கு விமோசனமே இல்லை. சிங்கள மக்கள் விமோசனம் பெறவேண்டும் என்றால் தமிழ் மக்கள் முதலில் விமோசனம் பெற வேண்டும். (ப)

(முற்றும்)

## மருந்துக் கலவையாளர் இல்லை

வலி.தென்மேற்கு,ஜூன்8

வட்டுக்கோட்டை, மாவடி சந்திக் அருகில் கடந்த பலவருடங்களாகத் தனியார் கட்டடம் ஒன்றில் செயற்பட்டுவரும் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்தில் மருந்துக் கலவையாளர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

மருந்துக் கலவையாளர் இல்லாமையால் மருந்தகப் பொறுப்பதிகாரியான டாக்டரின் மேற்பார்வையில் சிற்றூழியர்களே நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது எனவும் கூறப்படுகிறது. (4-135)



சாவகச்சேரி சரசாலை ஊழியர் நலன்புரிச் சங்க வெள்ளிவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் சி.இரகுநாதனின் நெறியாள்கையில் இடம்பெற்ற 'கவிதை பிறந்தது' என்ற நாடகத்தின் காட்சியொன்றை படத்தில் காணலாம். *(படம்-சாவகச்சேரிச் செய்தியாளர்)*

## பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்8

பொதுத்துறையில் நியமனம் பெறுவதற்கு விண்ணப்பித்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 215 பட்ட தாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 10ஆம், 11 ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறும் என்று பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வுக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, கிராம அலுவலரின் சான்றிதழ், பட்டச் சான்றிதழ் என்பவற்றின் நிழற்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது வழங்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (4-185)

## ஓய்வூதிய விவரங்கள் மறுசீரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் கடந்த 96ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஆசிரிய சேவை ஓய்வூதியர்களின் ஓய்வூதிய விவரங்கள் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலகத்தினால் தற்சமயம் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக சேவை தரத்தினை சேர்ந்தவர்கள் மற்றும் ஆயுதப் படையில் உள்ளவர்கள் தமக்குரிய விண்ணப்பங்களை உடனடியாகப் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு பிரதேச செயலக கணக்காளர் இ.யோகேந்திரன் கேட்டுள்ளார். (4-5)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

தென்மராட்சி,ஜூன்8

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வொறியின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிவான் 4ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

தர்மலிங்கம் ஸ்ரீ ஐங்கரன் என்பவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த கனகலிங்கம் கஜேந்திரன் என்ற சாரதிக்கு நீதிவான் ஆயிரம் ரூபாவினை அபராதமாக விதித்தார். (4-117)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

செம்பியன்பற்று,ஜூன்8

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பிரிவில் மீளக்குடியமர்நத 266 குடும்பங்களில் ரூபா 15ஆயிரம் முதல் கட்டக் கொடுப்பனவாகப் பெற்றுக்கொண்டவர்களுக்கே இரண்டாம் கட்டமாக 10ஆயிரம் ரூபா பனை கிராமிய வங்கி மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

இவற்றை பெறாதவர்கள் பனை கிராமிய வங்கியில் பெற்றுக்கொள்ளுமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை கேட்டுள்ளார். (4-36)

# தொழிலாளர் கற்கை நெறிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.பல்கலைக்கழக 2001/2002 கல்வியாண்டுக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் கற்கைநெறி, தொழிலாளர் கற்கையியல் டிப்ளோமா கற்கைநெறி ஆகியவற்றுக்கான இரணடாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

பரீட்சார்த்திகள் தொழிலாளர் கல்வி அலகில் பெறப்பட்டுப் பூர்த்தி செய்யபபட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்.

மீள்பரீட்சார்த்திகள் ஒரு பாடத்திற்கு 50 ரூபா வீதம் பரீட்சைக் கட்டணத்தைப் பல்கலைக்கழக மக்கள வங்கிக் கிளையில் அல்லது நிதியாளர் கருமபீடத்தில் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை விண ணப்பப்படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத் தொழிலாளர் கல்வியலகில் பல்கலைக்கழக அடையாள அட்டையுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8-ரி)

## நூலகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்8

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயணர் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், பாலர் பாடசாலை, மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் நூலகத் திறப்புவிழா நாளை புதன்கிழமை மாலை 5மணிக்கு சனசமூக நிலைய பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் சி.கா்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் (நந்தி) கலந்துகொண்டு நூலகத்தைத் திறந்துவைக்கவுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (10-15)

## காவலரண் இடம்மாற்றம்

கொழும்புத்துறை,ஜூன்8

யாழ்.ஆஸ்பத்திரி வீதி - கோயில் வீதிச் சந்தியில் அமைந்திருந்த படையினரின் காவலரண் பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

இவ்வீதிகள் ஊடான போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த இக்காவலரண் ஒரு வளவினுள் அமைக்கப் பட்டுள்ளது. (10-30)

## 700 கடாக்கள் பலியிடப்பட்டன

வலி.வடக்கு,ஜூன்8

கீரிமலை கவுணாவத்தை வைரவா ஆலய வருடாந்தப் பொங்கல் விழாவையொட்டி கடந்த சனிக்கிழமை சுமார் 700 இற்கும் மேற்பட்ட கடாக்கள் பலியிடப்பட்டுள்ளன.

பொங்கல் நிகழ்வும் அன்றையதினம் இடம்பெற்றது. இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு அடியார்கள் அதிகாலை 5 மணிக்கு முன்னரே உட செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதித்திருந்தனர்.

முதல்நாள் இரவு ஆலயத்தில் தங்கியிருந்து முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு நூறுபேர் அனுமதிக்கப பட்டு இருந்தனர்.

இதேநேரம், பலியிடக்கொண்டு வரப்பட்ட கடாக்கள் மேளம் அடித்து வெடிகள் கொளுத்தி மிகவும் ஆரவாரத்துடன் கொண்டு வரப்பட்டுப் பலியிடப்பட்டன.

அதிகாலை 6.00 மணிக்கு முன்னரே கடாக்கள் பலியிடும் செயற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. சுமார் மூவாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர் எனவும் கூறப்பட்டது.(4-86)

## நான்கு கிராமங்கள் புனரமைப்பு

புதுக்குடியிருப்பு,ஜூன்8

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 4 கிராமங்கள் 'காப்' திட்டத்தின் கீழ புனரமைக்கப்படவுள்ளன.

புதுக்குடியிருப்பிலுள்ள 4 பிரதேச செயலர் பிரிவிற்கும் தலா ஒரு கிராமம் என்ற ரீதியில் மேற்படி புனரமைப்புப்பணி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் விஸ்வமடுவிலுள்ள நெத்தலி ஆறு, கரைதுறைப் பற்றுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முறிப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச பிரிவிலுள்ள பனிக்கன்குளம் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிவபுரம் ஆகிய கிராமங்களே மேற்படி திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (10-ரி)

# பனை தென்னை வளச் சங்கம் மருதங்கேணியில் திறந்துவைப்பு

செம்பியன்பற்று,ஜூன்8

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் அலுவலகம் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இச் சங்கம் 16கிளை விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. இவை பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்தும் பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திலிருந்தும் பிரித்தெடுத்து உண்டாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (4-36)

# ஸ்ரீலங்கா எயார் லைன்ஸின் 12ஆவது அலுவலகம் வவுனியாவில்

கொழும்பு,ஜூன்8

விமானப் போக்குவரத்து சேவைக்கான பயணச்சீட்டுக்களை வழங்கும் வகையில் இலங்கை விமானசேவைப் போக்குவரத்து நிறுவனம் (ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ்) வவுனியாவில் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்துள்ளது

இந்த நிறுவனம் இலங்கையில் ஆரம்பித்துள்ள 12ஆவது அலுவலகம் இதுவாகும்.

கொழும்பு, கட்டுநாயக்கா, கண்டி, காலி, குருநாகல், இரத்தினபுரி, பதுளை, தம்புள்ள, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் ஏற்கனவே அலுவலகங்களை அமைத்து அவற்றினூடாக மேற்படி நிறுவனம் தனது சேவைகளை வழங்கி வருகின்றது.

கடந்த காலங்களில் கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு வெளியில் வசித்துவரும் மக்கள் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனத்தினூடான சேவைகளைப் பெறுவதில் பல நெருககடிகளைச் சந்தித்திருந்தார்கள். ஆனால், தற்போது வவுனியாவில் இந்த அலுவலகத்தை ஆரம்பித்ததன மூலம் சேவையை மேலும் இலகுவாக்கும் வகையில் ஒரு வேகமான திட்டத்தை முன்வைத்துள்ளதாக இந்த நிறுவனத்தின் விமானப் போக்குவரத்து சேவை அதிகாரி ஜீ.ரி.ஜெயசீலன் தெரிவித்தார். (8)

## பல்லாண்டு வாழி ! வாழி !



**உயர்திரு. சு.பொ.நடராஜா**

(தொழில் அதிபர் - அண்ணா தொழிலகம்)

சிறுகைத் தொழில்கள்
சிறக்கப் பலநாட்டி,
வறியர் பலர்க்கு
வழங்கித் தொழில் காக்கும்,
இறைவன் திருப்பணிகள்
எங்கெங்கும் செய்துவக்கும்
பொறுமை நெஞ்சன்
புன்னகையன் நடராஜா
சான்றோன் சமாதான
நீதிபதி யானமையால்
சுன்றமணி இணுவையர்நாம்
என்றென்றும் வாழ்த்திடுவோம்.

இணுவில்.

S.மங்கையும்,
ஊதுபத்திப் பகுதி ஊழியர்களும்,
துர்க்கா என்டபிறைசஸ்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 04 - 02 - 1936 | 09 - 05 - 2004 |



**திருமதி வடிவேலு ஜானகி அம்மாள்**

அழகான உருவங்கள் மறையலாம் - அம்மா
அன்பான உருவங்கள் ஒருபோதும் மறைவதில்லை!
காக்கை கரையவில்லை
கனவொன்றும் காணவில்லையே - அம்மா!
சீக்கிரமாய் இப்படியோர் தீமை விளைந்ததென்ன?
கைகால் செயலிழந்தாலும்
மூளைத்திறன் இழக்காது படுக்கையிலே இருந்தீர்களே!
தலைமுறைகள் பல கண்டு கிளைவிட்ட
விருட்சம் விழுதூன்ற முனைகையில்
வேரோடு சாய்ந்ததோ?
அது அம்மாவின் இறுதி ஊர்வலம்
நேசக்கரம் ஒன்று மறைந்தது
பாச உணர்வொன்று சுடர்விட்டுப் பறந்ததே - அம்மா
எம் குடும்பம் தேற்றுவார் இன்றிக் கலங்குகிறது!
முப்பது வருட அன்பான உறவு
மூன்று நிமிடத்தில் கலைந்ததுவே!
அடைக நீ சாந்தி அம்மா!
அடைக நீ சாந்தி அம்மா!!

பாடசாலை ஒழுங்கை,
தாவடி.

(32830)(43-21-11-19)

முகுந்தன்
(மகன்).

## தேவை

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு Accounts Clerk (கணக்கு எழுதுநர்), Cashier (காசாளர்), இரவுக் காவலாளி (Night watcher) தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**சென்றல் கிளினிக்**
வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

காலை-8மணிக்கு முன்பு / மாலை-4மணிக்கு பின்பு } நேரில் வரவும்.
T.P-2225977 (32829)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 - 10 - 1937 | 12 - 06 - 2001 |



**திருமதி பாக்கியம் பொன்னையா**

திதி: 08-06-2004 அபரபக்க ஷஷ்டி

உள்ளம் அகலா ஒளிவளர் சோதியே
வெள்ளப் பெருக்காய் விளங்கிய அமுதே
கள்ளம் இல்லாக் களிதரு கரும்பே
தெள்ளிய அன்பைச் சொரிந்திடு தேனே
கொள்ளை இன்பம் கொழிக்கும் கொழுந்தே
வள்ளலாய் வாழ்ந்த வளர்பிறை மதியே
அள்ளி எம்மை அணைத்திடும் அணங்கே
வெள்ளை உள்ளக் குலமகள் தாயே
பொள்ளென மூன்று ஆண்டுகள் போயின
எள்ளள வேனும் உந்தன்
எண்ணம் அகலா இதய பாக்கியமே.

- குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
54/2A, சந்தனமாதா முன் வீதி,
சுண்டுக்குளி.

(32834)(21-11-19)

நிரந்தர முகவரி:
தம்பகாமம், பளை.

## நெஞ்சு விட்டகலாத நினைவஞ்சலிகள்

### 3 ஆம் ஆண்டு

| மடிதழுவிட | பிடிநழுவிட |
|---|---|
| 20 - 02 - 1919 | 11 - 06 - 2001 |



*மாரிமுத்து பாலசுப்பிரமணியம்*

### 7 ஆம் ஆண்டு

| மடிதழுவிட | பிடிநழுவிட |
|---|---|
| 08 - 06 - 1926 | 28 - 05 - 1997 |



*பாலசுப்பிரமணியம் கமலசுந்தரியம்மா*

அன்பால் அரவணைத்து அறிவால் எமை வளர்த்தீர்கள்
துன்பம் அணுகாமல் எமைக் காத்தீர்கள்
ஆண்டுகள் பல கடந்து போனாலும்
ஆறவில்லை எங்கள் இதயம் இன்னும்
மீண்டும் ஒரு முறை உங்கள் திருமுகத்தை
நாங்கள் காணும் நாள் எந்நாளோ?

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்

- குடும்பத்தினர்.

(32831)(42-21-11-10)

# ரெலிக்கொம் பிராந்திய அலுவலகம் பண்ணையில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

ரெலிக்கொம்மின் யாழ்.பிராந்திய அலுவலகம், தொலைத்தொடர்பு பராமரிப்புச் சேவை அலுவலகம் என்பன நேற்றுப் பண்ணையில் அமைந்துள்ள ரெலிக்கொம் கட்டடத் தொகுதியில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டன.

இதுவரை காலமும் யாழ்ப்பாண ப.நோ.கூ.சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்த இவ்விரு அலுவலகங்களுமே நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

ரெலிக்கொம் நிறுவனத்தின் வடக்கு - கிழக்குப் பொதுமுகாமையாளர் எஸ்.கனகசூரியர் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம அதிகாரி சுகி அனான் இவ்விரு அலுவலகங்களையும் நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

ரெலிக்கொம் நிறுவனப் பிரதம செயற்பாட்டு முகாமையாளர் சிறீகாந் அமரசிங்க, பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி கபில சந்திரசேகா, பிரதம நிர்வாக அலுவலர் ஜோசப், நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வணபிதா றொஹான் அடிகளார், ரெலிக்கொம் நிறுவன யாழ்.பிராந்திய அலுவலக முகாமையாளர் எஸ்.சரவணபவன் மற்றும் தொலைத்தொடர்பு பராமரிப்புச் சேவை அலுவலக முகாமையாளர் எஸ்.அன்ரனிராஜா உட்பட ரெலிக்கொம் நிறுவன உயர்அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (3-5-30)

# தென்மராட்சி மினிபஸ் சங்கம் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளது

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் பிரதேசத்தில் மேலும் சில பகுதிகளுக்கு மினிபஸ் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து கச்சாய் ஊடாகவும், கனகன்புளியடி ஊடாகவும் யாழ்ப்பாணத்திற்கு நடத்தப்படும் மினி பஸ் சேவைகளை விஸ்தரிக்கவுள்ளதாகவும் -

வடத்தற்பளையிலிருந்து கேடில்ஸ் நகர், கெற்பேலி, கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு விரைவில் மினி பஸ் சேவைகள் புதிதாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடத்தற்பளை - உசன்வீதி தற்போது திருத்தப்பட்டு வருவதால் திருத்தவேலைகள் முடிந்ததும் விடத்தற்பளையிலிருந்து உசன்-மிருசுவில் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு மினி பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சுன்னாகத்திலிருநது புத்தூர் ஊடாகச் சாவகசசேரிக்கான 775ஆம் இலக்க மினி பஸ் சேவையினை தெல்லிப்பழை தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கடந்த முதலாம் திகதி ஆரம்பித்துள்ளனர். (4-117)

## இலக்கியவாதி கணேஸ் காலமானார்!

பிரபல முற்போக்கு இலக்கியவாதி கே.கணேஷ் கடந்த சனிக்கிழமை தனது 84ஆவது வயதில் காலமானார்.

கண்டி, தலாத்தோயாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தென்இந்தியாவின் மதுரைத் தமிழ்ச் சங்கம், திருவையாறு ராஜா கல்லூரி ஆகியவற்றின் மாணவருமாவார்.

"பாரதி" பத்திரிகையின் இணையாசிரியராகவும், வீரகேசரி பத்திரிகையின் உதவியாசிரியராகவும், யுனைட்டைட் பிறஸ் ஒவ் இந்தியாவின் இலங்கைக்கான செய்தியாளராகவும், சுதந்திரன் பத்திரிகையின் செய்தியாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.(10-ரி)

# மாவீரர் நினைவாக விளையாட்டு விழா

குடத்தனை,ஜூன்8

பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மாவீரர்களின் ஞாபகார்த்தமாக நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் இந்த விளையாட்டு நிகழ்வில் ஆண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டம், இருபாலருக்குமான 15 மைல் சைக்கிளோட்டம் என்பன நடைபெறும். அத்துடன், குத்துச்சண்டை, மல்யுத்தம, கைமடித்தல், கயிறிழுத்தல், கம்பிழுத்தல், தலையணைச் சண்டை, கிறீஸ்கம்பம் ஏறுதல், விநோத உடைப் போட்டி, தடையோட்டம், பாரம் தூக்கல், சிலம்படி, மூன்றுசில் சைக்கிளோட்டம், தேங்காய்துருவுதல் மற்றும் கழகங்களுக்கிடையிலான அஞ்சலோட்டம் ஆகிய விளையாட்டுகளும் நடைபெறவுள்ளன.

வடமராட்சிப் பிரதேச விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களும் நடைபெறவுள்ளன. (4-5-78)

## நேர்முகப் பரீட்சை

கைதடி,ஜூன்8

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாகாணப் பொதுச்சேவை ஆணைக் குழுவால் அண்மையில் நடத்தப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகப் பரீட்சை மீண்டும் நாளை புதன்கிழமை திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகத்தில் இடம் பெறும் எனவும் முன்னர் இத்தேர்வுக்குச் சமுகமளிக்காதவர்களை நாளை சமுகமளிக்குமாறும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் கேட்டுள்ளார். (10-75)

## முன்பள்ளி விளையாட்டு விழா

காரைநகர், தங்கோடை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பி.ப.2 மணிக்கு காரைநகர் நாகம்மாள் கோயில் முன்றிலில் த.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவமும் கௌரவ விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.தவராசா, ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் கு. கணேசலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச அரசியல் பொறுப்பாளர் நா.கானகன், சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் ப.ஐங்கரன், காரை.மேற்கு கிராம சேவையாளர் க.சண்முகசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர். (10-73)

## அதிபர் பதவி வெற்றிடங்கள்

வலிகாமம், கல்வி வலயத்துக்குட்பட்ட 5 பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன.

பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம், வறுத்தலைவிளான் அ.மி.த.க. பாடசாலை, வட்டு. மேற்கு அ.மி.த.க. பாடசாலை, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம், ஏழாலை இசிதோர் றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலேயே அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளன.

இந்த வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

விண்ணப்பதாரிகள் இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2:1ஐச் சேர்ந்தவர்களாயிருத்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்து.(4-ரி)

## கனடாவில் தமிழ்த் திரைப்படம்

ரொறன்ரோ,ஜூன்8

கனடாவிலுள்ள தமிழ் இளைஞர்கள் அமைப்பு ஒன்று தமிழ்ப்படம் ஒன்றை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் இப்படத்தை வெளியிடுவதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். ஜெகன் கந்தசாமி என்பவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (ப)

# வன்னியில் மீள்குடியமர்வுக்கு டென்மார்க் அரசு நிதியுதவி

கிளிநொச்சி,ஜூன்,8

வன்னி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்திற்கென டென்மார்க் அரசு 9கோடியே 50 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்திருக்கிறது.

டென்மார்க் அரசின் நிவாரண உதவித் திட்டத்தின் பிரதிநிதி, வவுனியா அரசாங்க அதிபர் எஸ். கணேஸும் அண்மையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் சந்தித்துப் பேசியபோதே இந்த உறுதி மொழியை வழங்கியிருக்கிறார்.

கடந்த வருடம் டென்மார்க் அரசு வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு 2கோடியே 40 லட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியிருந்தது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த பின்னர் இப்பிரதேசங்களில் நீர்ப்பாசனம், வீதியமைப்பு ஆகிய பணிகளுக்கும் மீள் குடியேற்றங்களுக்கும் உதவி வழங்குவதாக டென்மார்க் நிவாரண உதவிப்பிரிவு தெரிவித்துள்ளது. (4-6)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய நுண்கலைக் கல்லூரியில் இடம்பெற்றன.

காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையிலிருந்து ஆரம்பமான தியாகி பொன்.சிவகுமாரின் திருவுருவப்படம் தாங்கிய பேரணி மேற்படி கல்லூரியை வந்தடைந்தது.

ஆரம்ப நிகழ்வாக முல்லைத்தீவு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் செல்வி வ.கந்தையா பொது ஈகச்சுடரை ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தனும், தியாகி பொன். சிவ குமாரின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை மந்துவில் அரசரத்தினம் வித்தியாலய அதிபர் செ.ஸ்ரீஸ்கந்தராசாவும் ஏற்றிவைத்தனர்.

இதனைத்தொடர்ந்து, முல்லை மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.அறிவன்பன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுநதன், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் பி.கே.சிவலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

முல்லை மாவட்டத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளையும் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளான மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (10-ரி)

## வடமராட்சிப் பிரதேசத்தில்

# முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கப்படவேண்டும்

## கடற்றொழிலாளர் சமாசம் வேண்டுகோள்

வடமராட்சி,ஜூன்8

வடமராட்சிப் பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு போதிய ஊதியம் வழங்கப்படாமையினால் அவர்களுக்குத் தகுந்த ஊதியத்தை வழங்க பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும் என வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கேட்டுள்ளது.

இப்பகுதிகளில் பணியாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கப்படாமையினால் அவர்கள் சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்கொள்வதாக சமாசத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதையடுத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக பொது அமைப்புக்களிடம் இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது. (10-173)



இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விழாவில் பல்வேறு துறைகளில் படைப்புக்களை வெளியிட்டோர் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். விழாவில் மூதறிஞர் சிற்பி சிவ. சரவணபவன் பரிசில்களை வழங்கினார்.

படைப்பாளிகள் முறையே (வலமிருந்து இடமாக) ரூபன் மரியாம்பிள்ளை, தமிழ்க்கவி, தெணியான், புலோலியூர் க.சதாசிவம், நீர்வை பொன்னையன், ச.வே. பஞ்சாட்சரம், க.சச்சிதானந்தன், இ.முருகையன், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, கோகிலா மகேந்திரன், எஸ்.எம்.கோபாலரத்தினம், சோ.பத்மநாதன், சி.மகேந்திரன், தி.ஞானசேகரம், ச.அருளானந்தம், இ.இரத்தினவேலோன், சி.கதிர்காமநாதன் ஆகியோர் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படங்களில் காணலாம்.

*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடையை மூடுமாறு கோரி கடிதம் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்8

கசாப்புச் சட்ட விதிகளுக்கு முரணாகவும், சுகாதாரச் சீர்கேட்டுடனும் இயங்கும் புங்குடுதீவு மாட்டிறைச்சிக் கடையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என தீவுப்பகுதி தெறகுப் பிரதேச புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1991 ஆம் ஆண்டு தீவுப் பகுதியை விட்டு வெளியேறிய மக்களின் கட்டாக்காலி மாடுகளே இங்கு வெட்டப்பட்டு வருகின்றன.

1997 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் தீவுப்பகுதி பொது மக்களது உயிர் உடைமைகள் அனைத்தையும் பாதுகாப்பதற்கு அந்தந்தப் பிரிவுக் கிராம அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிப்பு விடுத்திருந்தார்.

வேலணை உதவி அரச அதிபர் கடந்த ஜனவரி மாதம் யாழ் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கும் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அனுப்பி வைத்த கடிதத்தில் பொதுமக்கள் விட்டுச்சென்ற சொத்துக்கள் அனைத்தினதும் பாதுகாவலர் அரசின் பிரதிநிதியான கிராம அலுவலர்கள்தான் என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய பொதுமக்கள் விட்டுச்சென்ற கட்டக்காலி மாடுகள் தமது உடைமை எனவும் எனவே தனதும் கிராம அலுவலரதும் அனுமதி பெறாது மாடுகள வெட்டப்படுவது சட்டவிரோதமானது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது இந்த நடைமுறையைப செயற்படுத்தத் தவறி - இவற்றிற்கு எதிரான முறையில் கள்ள மாடுவெட்டும் கசாப்புக்கடைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விலங்கு மனைச்சட்டம், கசாப்புக கடைச்சட்டம் (608), சுகாதாரப்பரிசோதகர் பரிசோதனை முத்திரையிடல் ஆகியவற்றிற்கு மாறா மேற்படி இறைச்சிக்கடை இயங்கிவருகிறது.

அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன. எனவே சம்பந்தபட்ட மாட்டிறைச்சிக்டையை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (4-15)

## வருடாந்த மஹோற்சவம்

மந்திகை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை சிறப்பாக ஆரம்பமாகவுள்ளது. (4-173)

## ஜேர்மன் பயிற்சியாளர் குழு நாளை வருகிறது

யாழ்ப்பாணம்,ஜுன்8

யாழ்.மாவட்டத்திலுள்ள கரபந்தாட்டத்தில் ஈடுபடும் வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை வழங்க ஜேர்மன் நாட்டுப் பயிற்சியாளர் குழுவொன்று நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

தமிழீழ விளையாட்டுத்துறை மற்றும் யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் வருகைதரும் இப்பயிற்சியாளர் குழு நாளை புதன்கிழமை காலை 10 மணிமுதல் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் வீராங்கனைகளுககான கரபந்தாட்டப் பயிற்சியினை வழங்கும்.

இதில் பங்குபற்ற விரும்பும் வீராங்கனைகளை குறித்த நேரத்திற்கு வருகைதருமாறு யாழ்மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர். (4-5)

## கலைப்பீட தடகளப் போட்டி இறுதி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்8

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் தடகளப் போட்டிகளின் இறுதி நாள் போட்டிகளும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறவிருக்கின்றன.

இந்தப் போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் சிறப்பு விருந்தினராக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் கலந்து கொள்வர்.

## சீருடைத்துணி நாளை விநியோகம்

எழுதுமட்டுவாள் தெற்குப் பிரிவு மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் நாளை புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில்வைத்து வழங்கப்படவுள்ளது.

மாணவர்களின் பெற்றோர் தவறாது சமுகமளித்து சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கிராம அலுவலர் பொ.நவரத்தினராசா அறிவித்துள்ளார். (4-117)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜுன்8

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பு ஊசி ஏற்றும் பணி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மதியம் 12 மணிவரை கொக்குவில், தலையாழி இந்திரா சன சமூக நிலையத்தில் இடம்பெறவிருக்கிறது (3)

# விளம்பர ஒலிபரப்புச் சேவையின் சத்தத்தைக் குறைத்து உதவுக!

## யாழ். வணிகர் கழகத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுன்8

யாழ்.நகர மையத்தில் ஒலிபரப்புச் செய்யப்படும் விளம்பர சேவையின் சத்தத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.நகரில் தொலைத்தொடர்பக உரிமையாளர்கள் யாழ்.வணிகர் கழகத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். மேறபடி ஒலிபரப்பு சேவையின் சத்தம் மிகையாக இருப்பதனால் அது தமது தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்றும் -

இதனால் இந்த விடயத்தில் தலையிட்டு விளம்பர ஒலிபரப்பின் சத்தத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தொலைத்தொடர்பு நிலையங்களின் உரிமையாளர்கள் வணிகர் கழகத்திடம் கோரியிருக்கின்றனர். இதுதொடர்பாக யாழ். மாநகர சபையுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (4-7-12)

## இலவசத் திருமணப் பதிவு

கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் சட்டப்படி திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாது வாழ்ந்துவந்த் 15 தம்பதியினருக்கு இலவச திருமணப் பதிவு அண்மையில் நடத்திவைக்கப்பட்டது.

கொழும்புத்துறை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வை யாழ்.பல்கலைக்கழக சமுதாயத்துறை அமைப்பினரும் யாழ். லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து மேற்கொண்டனர். (10-30)


## வேலைக்கு உடன் ஆள் தேவை

★ கொம்பியூட்டர் ரைப்பிங் & பிரிண்டிங் ★ இன்ரநெற், ஈமெயில்
★ தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு
★ CD விற்பனை, ஓடியோ, வீடியோ பாடல்களைப்பதிவுசெய்வதற்கு

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு பெண்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். பகுதிநேரமாக வேலை செய்வதற்கு ஆண்கள் தேவை. நேரடியாக உடன் தொடர்புகொள்ளவும்

*125, மொடேன் நெற்*
*(நல்லூர் பிரதேச சபை பொது நூல்நிலையம் முன்பாக)*
*ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

(32846) (12-32-16)


# 31 ஆம் நாள் நினைவலைகள்



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 16 | 09 |
| 11 | 05 |
| 1959 | 2004 |

**திருமதி**
**மாலினி கணேஸ்வரன்**

பூவுலகில் வந்துதித்து
குடும்பத்திற்காய் தோள்கொடுத்து
பாதியிலே பறந்து விட்ட பாசமே!
ஆறவில்லை எம் நெஞ்சம்
அஸ்தமனத்தின் மாதமொன்றில்
எம் கண்ணீர் துளிகள் உமக்கு!

*முதலாம் கட்டை,*
*உடுவில்.*

(32841) (12-32-16) - குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## இ.ஆ.கோபாலபிள்ளை

அல்லையம்பதி, துன்னாலையைப் பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்று சண்முகநாதன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான இ.ஆ.கோபாலபிள்ளை அவர்கள் நேற்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-06-2004) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3மணியளவில் கருகம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லையம்பதி,*
*துன்னாலை, கரவெட்டி.* (ச-35489) (12-32-16)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## துரையப்பாப்பத்தர் பஞ்சரெத்தினகோபால்

(அம்பிஹா ஜுவெல்ஸ் கன்னாதிட்டி)



யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைச் சேர்ந்த துரையப்பாப்பத்தர் பஞ்சரெத்தினகோபால் அவர்கள் நேற்று (07.06.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சாந்தாராமன், சம்பத், முராரி மற்றும் லெச்சுமணபிரசாத், கஸ்தூரி, தீனபந், கௌரி, ஜானகிராமன், மோகாம்புஜம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, பொதிகாசலம் மற்றும் கிரிதரன், சிவகுமாரன், முத்துலெட்சுமி, சாந்தினி, வேலம்மா, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி, வேணுகோபால், இராஜகோபால், இராசாமணி, ஞானம்மாள், மஹாலட்சுமி, மகேஸ்வரி மற்றும் கோபாலசாமி, ஜெயலெட்சுமி, பாக்கியலெட்சுமி, வரதலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் விட்டல், நரசிம்மன், காமாட்சி, ஜெயவர்த்தனன், தீபன், விஜயபாஸ்கரன், வாசுதேவன், சைலந்தி, சுகன்ஜா, ரிசியந்தன், பிருந்தாவன், குமரன், அரவிந், காயத்திரி, காமேஸ்வரி, தாரிணி, நரேந்திரன், மாதங்கி, நிதர்சன், கார்த்திகாயினி, ராமானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2004) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/42, கன்னாதிட்டி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

(32843) (12-32-16)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா மகேஸ்பரன்

(முன்னாள் ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகேஸ்பரன் 06.06.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் திருத்தேவியின் அன்புக் கணவரும் Dr.ரூபவதனா (Neuro Surgeon - Norway), ரகுபரன் (M.Sc. Computer Engineering - Norway), ரூபசாந்தா (Accountant - London), ரூபது ஷித்தா (Faculty of fine Arts - Norway) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வசந்தன் (Bio Engineering - Norway), பாமா (B.Sc. Computer Engineering - Norway), பிரகாஷ் (Electrical Engineering - London), அன்பழகன் (B.Sc. Computer Engirieering - Norway) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவப்பிரியன், றம்மியா, அபிநயா, வைஷ்ணவி, கீர்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி சச்சிதானந்தம் (முன்னாள் அதிபர், இராமநாதன் கல்லூரி - கனடா), காலஞ்சென்ற சச்சிதானந்தசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கத்தாப்படி வீதி,*
*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.*

(32844) (32-12-16)

தகவல்:
திருத்தேவி
(மனைவி).


## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

TRRO COMPUTER TRAINING CENTER

DIPLOMA IN MICROSOFT OFFICE XP | DIPLOMA IN DESKTOP PUBLISHING(DTP) | CERTIFICATE COURSES

**இதோ! மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்!!**

சகல கற்கைநெறிகளுக்குமான ஆரம்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. புதிதாக வகுப்புகளில் சேர விரும்புவோர் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

கற்கைநெறிகள் நடைபெறும் இடங்கள:
*அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.*
*106, 4ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம். T.P.021-222-2416*

*இன்னாசித்தம்பி பரியாரியார் வளவு,*
*கதிரமலை கோவிலடி, சில்லாலை.*

*விண்ணப்பப்படிவங்களை இங்கே பெற்றுக்கொள்ளலாம்.*

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
MC LEED HOSPITAL
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
T.P: 071-230 7628

(ச-35483) (12-32-16)

## பிரிவு II
## மூன்று மாதகால மனையியல் பயிற்சிநெறி

★ தையல் -சாறிவேலை
★ பூவேலை-புக்கே
★ தலையலங்காரம்
★ கேக் ஐசிங்
★ வூல் நூல்வேலை
★ (F) பவ்ரிக் பெயின்ரிங்

*ஆரம்பம்:* 13-06-2004
*நேரம்:* பி.ப. 3.00 மணி
Career.Com 79,பிரதான வீதி, யாழ்.
செவ்வாய், வியாழன் தவிர ஏனைய நாள்களில் பதிவுசெய்யலாம்.
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)

(32843) (12-32-16)

## WANTED

Off - Set Machine - Minder
ஆப் - செட் மெசின் மைண்டர்கள்
உடன் தேவை நேரில் வரவும்

BHARATHI PATHIPPAKAM,
OFF- SET & LETTER PRESS PRINTERS,
430, K.K.S. ROAD, JAFFNA.

## மணமகன் தேவை

1966 இல் பிறந்த அவிட்ட நட்சத்திரம், 2ஆம்பாதம் (மகர ராசி) இந்து கௌரவ குடும்ப மணமகளுக்குப் பொருத்தமான (உள்நாடு, வெளிநாடு) மணமகன் தேவை.
தொடர்பு: T.P. 3851
(32851)

## வான் விற்பனைக்கு

58-XXXX தொடர் இலக்கமுடைய டொல்பின் ஓட்டமற்றிக் ரக வான் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.
தொடர்புக்கு:
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்,
*212, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(ச-35481)

## விற்பனையாளர் தேவை

எமது புத்தக நிறுவனத்திற்கு புத்தக அலுவலக உபகரண விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. இருபாலாரும் நேரில் வரவும்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்,
*212, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
தொலைபேசி—222 5542
(ச-35482)

# மானிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் மாணவருக்கு மூளைக் காய்ச்சல் தடுப்பூசி

## இந்தவாரம் ஏற்றுவதற்கு ஏற்பாடு

வலி.தென்மேற்கு, ஜூன்8

மானிப்பாய், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பாடசாலை மாணவர்களுக்கு மூளைக் காய்ச்சல் நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளன.

ஐந்து வயதுக்கும் பத்து வயதுகளுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு குடும்பநல சுகாதார சேவை உத்தியோகத்தர்களால் இத்தடுப்பு ஊசி மருந்து பாடசாலை ரீதியாக ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் - ஒரு வயது பூர்த்தியடைந்த -ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அந்த அந்தப் பகுதிகளில் உள்ள தாய் - சேய் சிகிச்சை நிலையங்களில் வைத்து எதிர்வரும் 12 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

கடந்த வருடம் தடுப்பூசி மருந்து கொடுத்த சிறார்களுக்கு இம்முறை தடுப்பூசி ஏற்றப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

# உதவி வைத்தியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்

கொழும்பு,ஜூன்8

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கடைமையாற்றும் அதிகாரிகளின் வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி நேற்று ஆரம்பமானது.

நேற்று ஒரு நாள் மட்டுமே இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் அவர்கள் ஈடுபடப்போகிறார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என அவர்கள் தற்போது அறிவித்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் உள்ள 850 வைத்தியசாலைகளில் கடைமையாற்றும் 1800 பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். எனினும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பணிபுரியும் உதவி வைத்தியர்களும், பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களும் வழமை போல் கடைமைக்குச் சமுகமளித்தனர்.

சுகாதார அமைச்சின் செயலாளரின சுற்றறிக்கையின் படி பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு உத்தரவாதமளிக்கப்பட் சம்பள உயர்வுகள் வழங்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளருடன் பேசிய போது ஏப்ரல் மாதம் முதல் அது வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. ஆனால், இன்று வரை சம்பள உயர்வு வழங்கப்படவில்லை. இந்தச் சம்பள உயர்வு கிடைக்கும் வரை வேலைக்குத் திரும்பப்போவதில்லை என பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாளை மறுதினம் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட 54 சுகாதாரத்துறை ஊழியர்கள் சங்கங்களின் உறுப்பினர்களும் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

இதனைத் தவிர்பதற்கு சுகாதார அமைச்சு மேற்கொண்ட முயற்சிகள் பலிக்கவில்லை. திட்டமிட்டபடி வேலை நிறுத்தம் நடக்கும் என்கின்றனர் அரசாங்க வைத்திய அதிகாரிகள்.

சுகாதாரத்துறையில் மற்றுமொரு பெரிய தொழிற்சங்கமான தாதிமார் சங்கத்தின் தலைவர் வண.முத்தெட்டுவதேரர் இந்த வேலை நிறுத்தத்தை கண்டித்துள்ளார்.

தமது சங்க உறுப்பினர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொளளமாட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

(க)

# முன்பள்ளி ஆசிரியர் சம்பளத்திற்கு ஒதுக்கீடு இல்லை ஆனால் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## மகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜூன்8

முன்பள்ளி அசிரியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் சம்பளம் வழங்க முடியாது. ஆனால், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி ஆசிரியாகளுடனான சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர சம்பளம் வழங்குமாறு ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு மேற்கண்டவாறு கல்வி அமைச்சின் செயலாளர் பதில் அளித்தார். தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் நடத்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப் ளோமா பயிற்சி வகுப்பினை தமிழ் மொழியில் நடத்த ஆவன செய்யுமாறு விடுத்த வேண்டுகோளிற்கு இவ்விடயம் தொடர்பாக பல்கலைக் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் கூறினார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த சந்திப்பில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.மகாலிங்கம், கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி) செல்விஜெயா தம்பையா, தென்மராட்சி வலயக் கல்விபபணிப்பாளர் வ. செல்வராசா, உதவிக கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சுபாக்கியராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-117)

## நேர்முகப் பரீட்சை

கோப்பாய்,ஜூன்8

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் பட்டதாரிகளை அரச துறையில் ஆள் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(எ-72)

# மரண அறிவித்தல்

## திருமதி திரேசம்மா சாமுவேல்(சின்னையா)

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரேசம்மா சாமுவேல் (சின்னையா) நேற்று (7.5.2004) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் சின்னையாவின் அன்பு மனைவியும தேவக்குமார், சரோஜாதேவமலர் (அருளகம் பெண்கள் இல்லம்), நிர்மலா தேவி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.05.2004) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரியோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(32852)(36-12-17)

தகவல்:
சரோஜா (மகள்)
(அருளகம் பெண்கள் இல்லம்).

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்றும், நாளையும் கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வுகள் முத்தமிழ் மன்ற துணைத் தலைவர் ம.பிரபாகரன தலைமையில் ஆரம்பமாகும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

நாளைய நிகழ்வுகள் கா. உதயகுமார தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசுவும் சிறப்பு விருந்தினராக முன்னாள் மகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி த். பெரியதம்பியும் கலந்துகொள்வர்.

இருநாள் நிகழ்வுகளிலும் சிறப்புக கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். ஆசியுரையை கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி நிகழ்த்துவார். (எ)

## கிராம அலுவலர் அலுவலகம் இடம்மாற்றம்

கொழும்புத்துறை,ஜூன்8

கொம்புத்துறை கிழக்கு (ஜே/62) கிராம அலுவலர் அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை கொழும்புத்துறை வீதியில் இயங்கிவந்த இந்த அலுவலகம் தற்போது ஆனந்தன் வடலி வீதியில் 26 ஆம் இலக்க கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான இலவசச் சீருடைத் துணி விநியோகம் புதிய அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப் படுவதாக கிராம அலுவலர் ஐ. புஸ்பராணி தெரிவித்துள்ளார்.

(எ30)

## உள்ளூராட்சி செயலர் கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜூன்8

யாழ்மாவட்ட உள்ளூராட்சி மன்றச செயலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-117)

## சாவகச்சேரி லயன்ஸ்கழகம் விருதுகள் பெற்றது

தென்மராட்சி,ஜூன்8

கடந்த வருடத்தில் சலரோக விழிப்புணர்வு தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டமைக்கான சர்வதேச விருது சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற 306 பி மாவட்ட லயன்ஸ் கழக கருத்தரங்கில் சர்வதேச லயன்ஸ் கழக முதலாவது உதவி ஆளுநர் லயன் ஆசோகா மேத்தா இவ்விருதினை வழங்கியுள்ளார்.

அத்துடன் சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட மட்டத்தில் வீதிப்பாதுகாப்பு, சிறநத தலைவர், சிறந்த செயலாளர், சலரோக விழிப்புணர்வு, சிறந்த நிர்வாகம் போன்றவற்றுக்கான விருதுகளையும் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் பெற்றுள்ளது .

(எ-117)


நாகம்ஸ் சுன்னாகம்



டால்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ்
கில்லி (ரீல்ஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(சி35399)(12)

ராஜா யாழ்ப்பாணம்



3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரீஷா நடித்த
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517) (22)

நிரஞ்சனாஸ் சங்கானை
கார்த்திக், ரோஜா, மணிவண்ணன் நடித்த
சின்னராஜா
காட்சிநேரம்:11.00, 2.45, 6.00 (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு
AMPRICAN PIE
(சி-34420)(29)





சி.சி.எஸ். கணனி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், நேசராணி இராசதுரை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக விவசாய பீடப் பீடாதிபதி சு.இராசதுரை, யாழ். கல்வி வலய ஆரம்பப்பிரிவு முதன்மை ஆசிரியர் திருமதி க. பிரகதீஸ்வரசர்மா மற்றும் நிறுவன இயக்குனர் க.கைலைவாசன் ஆகியோரைப் படத்தில் காணலாம். (10)

# சுயதொழில் புரிவோருக்கு ஓய்வூதியம்; அறிமுகக் கூட்டம் யாழ்.செயலகத்தில்

## 15 ஆம் திகதி செவ்வாயன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன்8

சமூக பாதுகாப்புச் சபையினால் சுயதொழில் புரிவோருக்கான ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்வது தொடர்பான கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கென பாதுகாப்புச் சபையின் பொது முகாமையாளர் நேசையா, உதவி பொது முகாமையாளர் மேர்வின் குணசேன, செயற்பாட்டு முகாமையாளர் ஓபநாயக்கா ஆகியோர் வருகைதரவுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள், சமூக சேவை அலுவலர்கள், ஓய்வூதியத்திட்டதினால் பயன்பெறும் சிறுதொழில் புரிவோர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குகொள்ளவுள்ளனர்.

யாழ்.மாவட்ட சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தினரை மீள் ஒழுங்கு செய்வதும், இவ்வேலைத்திட்டத்தை திருப்திகரமாக முன்னெடுப்பது சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதுமே இந்தக் கூட்டத்தின் நோக்கம் என்த் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு முடிவடைந்ததும் ஊடகவியலாளருடனான கலந்துரையாடல் ஒன்றையும் அவர்கள் நடத்தவுள்ளதாக சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்மாவட்ட இணைப்பாளர் எஸ்சிவரஞ்சன் தெரிவித்தார். (எ-ரி)

# அனுமதியின்றி சாராயம் விற்ற நால்வருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த நால்வருக்கு யாழ்நீதிமன்றம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாரிமுத்து தெய்வேந்திரன், அபூபக்கர் வீதி நாவாந்துறையைச் சேர்ந்த சித்திரன் ராஜேஸ்வரன், சோனகதெரு, நாவாந்துறையைச்சேர்ந்த பெரியசாமி வடிவேல் ஆகியோரைத் தலா 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும், தலா 5 ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறும்-

மீனாட்சி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி ரவிக்குமாரை 45 ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் 10 ஆயிரம் ரூபா தர்மப் பணமாகவும் செலுத்துமாறும் - நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

## சுகாதார ஊழியர் பகிஷ்கரிப்பு

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார உத்தியோகத்தர்களுக்கு இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரை வழங்காததைக் கண்டித்து சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாளையும் நாளை மறுநாளும் வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இதற்கு அமைவாக, யாழ்மாவட்டத்தில் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களில் சம்பள அதிகரிப்பைப் பெறாத பதிவு வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவை உத்தி யோகத்தர்கள் தாதிய உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள், சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் நாளை காலை வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுமாறும்- காலை 9 மணிக்கு யாழ்பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணி மனைக்கு முன்பாக ஒன்றுகூடுமாறும்- ஸ்ரீலங்கா பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சஙகத்தின் யாழ் கிளை கேட்டுள்ளது.(எ-12)


வேலை ஆள் தேவை

அனுபவமுள்ள ஆண்/ பெண் வேலையாள் தேவை
(மாநகர சபை எல்லைக் குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
உடன் நேரில் வரவும்.
ராஜா பென்ஸி ஹவுஸ்
153, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-35490)(36)



தவறிவிட்டது

நேற்று (07.06.2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ்.பஸ் நிலையத்தில் செல்வி பூ.சுஜித்தா என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய (வன்னி நிரந்தர அனுமதி அட்டை உட்பட) சிறிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
N.கண்ணதாஸ்,
யாழ்.மத்திய பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.
(32847)(36)





மீண்டும் ஒரு புதிய பிரிவு

Hair Style
Bridal Make - Up
Cake Icing
Dress Making
Fabric Painting

இரண்டு மாத பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தனி ஒரு பயிற்சியிலும் ஈடுபடலாம்.

ஒரு பயிற்சிக்கு முழுமையான கட்டணம் ரூ 750/= மட்டுமே.

11.06.2004
(வெள்ளிக்கிழமை)
ஆரம்பமாகின்றன.

தூரிகை

செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.
ம.ம.வி. வீதி,
நெல்லியடி.
(சி-35478)

# விடுதலைப் போராட்டத்தினுடைய மிகப்பெரிய சக்தி மாணவர்களே!

## எழுச்சிதின நிகழ்வில் உரை

எந்த நாட்டிலும் விடுதலைப் போராட்டத்தின் சக்தியாக மாணவர்களே இருந்துள்ளனர். அந்த வகையில் தமிழ் மக்களுடைய போராட்டத்திலும் கூட இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மாணவ மாணவிகள் தமது இன்னுயிரை ஈய்ந்துள்ளமை மறக்கமுடியாத ஒன்றாகும்.

மேற்கண்டவாறு தியாகி சிவகுமாரனின் சகோதரரும் லண்டனில் வசிப்பவருமான பொன். சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராயில் அமைந்துள்ள தியாகி சிவகுமாரனின் சிலையடியில் கோப்பாய் பிர தேச மாணவர் அமைப்பின் உப தலைவர் செல்வி கலைவாணி தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சிவகுமாரனின் சகோதரன் சிவசுப்பிரமணியம் கூறியவதாவது:-

இன்று எம்மண்ணில் இடபெற்றுக் கொண்டிருக்கும் பல நிகழ்வுகள் எமக்குக் கவலையளிப்பதாகவும், வேண்டத்தகாதவையாகவுமே இருக்கின்றன.

நாங்கள் வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும்கூட தமிழர்கள் கலாசாரத்தைப் பேணிக்கொண்டே இருக்கின்றோம். இம்மண்ணில் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது நாம் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று வாழ்கின்றோம்.

அங்கும்கூட புலம்பெயர்ந்த எங்களுடைய பிள்ளைகளே கல்வியில் முன நிற்கின்றார்கள். அதனைப் பார்க்கும் போது எமக்கு பெருமையாக இருக்கின்றது. இம்மண்ணில் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு மின்சாரம் இல்லாமலும், விளக்கு இல்லாமலும்கூட இருந்த போதிலும்கூட கல்வியில் முன்னேற்றம் காட்டுவது பாராட்டப்படவேண்டியதாகும்.

தொடர்ச்சியாக எம்மை ஆண்டு வந்த சிங்கள அரசுகள் காலத்துக் காலம் எம்மை அடக்கி ஆள்வதிலேயே கவனம் செலுத்தி வந்தன. எமது தமிழ்த் தலைவர்களும் அன்றைய காலகட்டத்தில் பல்வேறு போராட்டங்களையும் சாத்வீக வழியில் மேற்கொண்டுவந்தார்கள்.

இதன்மூலம் தமிழ் தலைவர்கள் சொல் அடிக்கும், கல் அடிக்கும் உள்ளாக்கப்பட்டார்களே அன்றி வேறு எதனையும் ஏற்படுத்தமுடியவில்லை.

1971ஆம் ஆண்டு தமிழ் மாணவர்களுடைய கல்வியை அழிக்கவும் சிதைககவும் கூடிய செயற்பாட்டினை அன்று ஆட்சியில் இருந்த சறிமாவோ பண்டாரநாயக்க அரசுமேற்கொண்டது. தரப்படுத்தல் முறையை அறிமுகம் செய்தார்கள். இது எமது போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இதற்கு அன்று இருந்த மாணவர் பேரவை வழிசமைத்தது. அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்தி எதனையும் எதிர்காலத்தில் சாதிக்க முடியாது - பெறமுடியாது - என்ற நிலையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

மாணவர்கள் தமது கல்வி உரிமைக்காக கையில் எடுத்த ஆயுதங்கள் இன்று இனத்தின் விடுதலையைப் பெறும் போராட்டமாகச் சென்று வெற்றிப் பாதையில் நிற்கிறது. வெளிநாடுகளில் இருக்கும் நாங்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கின்றோம்; பங்காளர்களாக இல்லை. ஆனாலும் இப்போராட்டத்திற்கு எமது ஆதரவு என்றும் இருக்கும் - என்று குறிப்பிட்டார்.

ஆசிரியர் மகேஸ்வரன் உரையாற்றும் போது:-

மாணவர்களிடையே தற்போது புகைத்தல், போதைப் பொருள் பாவனை, மதுப்பாவனை என்பனவும் ஏற்பட்டுள்ளன. இவை மாணவர்களின் சமுதாயத்தை சிதைத்து சமூகத்திற்கும் நாட்டுக்கும் உதவாதவர்களாகச் செல்லவே வழிசமைக்கும். இதைப் போன்று திரைப்படம் என்ற மாயையுள்ளும் மாணவர் சமுதாயம் மூழ்கிப்போயுள்ளது. இவை யாவும் எமக்கோ, எம் மண்ணிற்கோ விடிவை ஏற்படுத்தப்போவதில்லை. நாம் ஒவ்வொருவரும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டுமாக இருந்தால் அதனைப் பற்றி ஒவ்வொரு மாணவர்களும் சிந்திக்க வேண்டும். இன்றைய நிலைப்பாட்டை சுதந்திரமான நிலைமை என்று நாம் கொள்ளமுடியாது எனவும் குறிப்பிட்டார்.

(எ-9-86-180)



திருமதி மீ.எவ்.சின்னத்துரை எழுதிய 'கல்வியில் முன்னேற' என்ற நூல் வெளியீட்டுவிழா அண்மையில் திருவழிபாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை நூலாசிரியையிடமிருந்து டி.எம்.ஜேசுதாசன் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப் படுகொலைகள், வன்முறைகள் நிகழ்கின்றன. சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துவிட்டன.

இந்நிலையில், டாக்டர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அரசு தேர்தல் களத்தில் அளித்த வாக்குறுதிகளின்படி அரச ஊழியர்களுக்கு 70 வீத சம்பள உயர்வை வழங்கவில்லை. 60 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்க உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

அதேவேளை, அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் மத்தியில் பெரிதும் அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசு உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இது தொடர்பாக நடாளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் - என எதிர்க்கட்சிகள் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்தின.

இதற்கமையவே இம்மாதம் 22, 23, 24 ஆம் திகதிகளில் நாட்டின் நிலைமைகள் தொடர்பான விவாதம் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. (க)

## மல்வத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் மறைவு இலங்கையருக்கும், பௌத்த உலகத்துக்கும் பேரிழப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

மரணிக்கும்போது அருக்கு வயது 87. (க)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்சிற்றம்பலம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார்.

முத்து வாசுதேவன் (வயது-35) என்ற சந்தேகநபரை தெய்வானை (வயது-60) என்ற அப்பெண்மணி அடையாளம் காட்டினார்.

சந்தேக நபரைப் பொலீஸார் கைது செய்து சோதனை நடத்திய சமயம் அவரது உள்ளுறுப்பிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட சிறிய புல்லையும், சம்பவம் நடந்த பகுதியில் காணப்பட்ட புல்லையும், பிரேத பரிசோதனையின் போது சிறுமியின் உள்ளுறுப்புகளில் இருந்து பெறப்பட்ட தடயப் பொருள்களையும் இரசாயனப் பகுப்பாய்வாளரின் பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-164)

## இயல்பு வாழ்க்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிக்கப்படும்; விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் தொடரும் என அறிவித்தார்.

ஆனால், ஜனாதிபதியின் உறுதிபபாடற்ற தன்மையினால் சமாதானப் பேச்சுக்களுக்கு அவரால் வரமுடியவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களைத் தொடங்கி, இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபையை புலிகளிடம் வழங்க அவரது அரசு தவறிவிட்டது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு, தனது அசமந்தப் போக்கைக் கைவிட்டு எமது மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென இந்த அறிக்கை மூலம் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது - என்றுள்ளது.

இப்பேரணி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பித்து யாழ். செயலகத்தினைச் சென்றடையவுள்ளது. பேரணியின் முடிவில் மகஜர் கையளிப்பு மற்றும் கண்டனக் கூட்டம் என்பன இடம்பெற ஏற்பாடாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

### கலந்துரையாடல்

இதேவேளை - இந்தக் கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் - இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள், யாழ் வணிகர் கழகம், ஏனைய வர்த்தகர் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச மாணவர் பேரவை, ஏனைய பொது அமைப்புக்கள், அரச ஊழியர்கள், கல்விச் சமூகம், தனியார் நிறுவனம் போன்றவற்றின் பிரதிநிதிகளின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (எ-9-173)


**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ். நகர்.
SPOKEN ENGLISH WITH GRAMMAR
புதிய பிரிவு
BY: BRITTO
ஆரம்பம்: 09.06.2004 WED. 3.00
(MON., WED. - 3.00 p.m.)
(32832)

**Computer Express**
Institute of Information Technology
Maniam's Building
இல.152/1, சிறாம்பையடி வீதி, யாழ்ப்பாணம்.
0777-222422, 0777-278880.
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணச்சலுகை வழங்குவதில் பெருமையடைகின்றோம்.
ஆரம்பம்: Batch II - 13.06.2004
Batch III - 20.06.2004
(சி-35471)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
LECTURES BY: Mr. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்: 09.06.2004. புதன் மாலை 5 மணி.
WED. MON. } 5 p.m. - 6 p.m.
HARY'S INSTITUTE
இல.: 564, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
(32848)

**யாதவன் சேவீஸ் சென்றர்**
அனைத்து ரக வாகனங்களையும் நல்ல முறையில் சேவீஸ் செய்து குறித்த தவணையில் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:
யாதவன் சேவீஸ் சென்றர்
(மாலு சந்திக்கு அண்மையில்)
அல்வாய் தெற்கு, அல்வாய்.
(முத்துமாரி அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதியில்)
(32835)

**இந்திய பரம்பரை ஜோதிடர்**

அருள் வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ். மக்களின் விருப்பத்திற்கு இணங்க யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும்
உங்கள் வாழ்வில் வெற்றியும், சுபீட்சமும் அடையவும்
வியாழன் மாற்றப் பலன்களை அறிந்துகொள்ளவும்.

அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்
அம்மாவை சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா,
121, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (முன்பு இருந்த அதே பழைய இடம்).
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.
(32711)(12-17)

**இலவசக் கருத்தரங்கு**
CHARTERED ACCOUNTANCY & aat கற்கை நெறிகளின் இன்றைய தொழில் வாய்ப்பில் முக்கியத்துவம், பதிவுசெய்வதற்கான அடிப்படைத் தகைமைகள், விலக்குகள் (EXEMPTIM) பூர்த்தி செய்வதற்கான வழிவகைகள் என்பன குறித்து பூரண விளக்கமளிக்கும் இலவசக் கருத்தரங்கு.
உயர்ந்த ஊதியத்துடன் மதிப்புமிக்க தொழில் வாய்ப்பைப்பெற உங்களை இக்கருத்தரங்கு தயார்ப்படுத்தும்
பட்டயக்கணக்காளரால் நடத்தப்பட இருக்கும் இக் கருத்தரங்கில் கலந்து பயனடைய உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களையும், தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரையும் பெற்றோர்களையும் IPAS அழைக்கின்றது.
காலம்: 12.06.2004 (சனிக்கிழமை)
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: IPAS விரிவுரை மண்டபம்.
அலுவலக நேரம் :
திங்கள், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் 9.00 -13.00 மணிவரை
0777-563292, 0777 - 563294
C/35484)
புதிய பிரிவுகள் ஆரம்பம்
50% free
★ Chartered Accountancy - foundation & Intermediate - Jan -2004
★ aat - stage 11 - Dec 2004
பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விரிவுரைக் கட்டணங்களில் 50% கழிவு வழங்கப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துகொள்கின்றோம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.
★ இச்சலுகை 27/06/2004 வரை மட்டுமே!
IPAS Institute of Professional Accounting Studies
199, பிரதான வீதி (பிறிமியர்பேக்கரிமேல்மாடி) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.